பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 13 திங்கட்கிழமை 26.04.2021 கதிர் 172

**இது ரகசியம் அல்ல!**

தமிழர் தேசத்தின் தந்தை செல்வாவின் நினைவு தினம் இன்று.

அதையொட்டி – பயனுள்ள – ஒரு கருத்துப் பகிர்வை இன்று வரைவது பொருத்தம் என்று நினைக்கின்றேன்.

இது என்னுடைய 'ஒரிஜினல்' தகவல் அல்ல. வேறு பக்கம்02

## சீன ஆதிக்கம் அதிகரிப்பதால் தமிழர் விடயம் பேசப்படலாம்!

### முன்னாள் எம்.பி. சரவணபவன் தெரிவிப்பு



இலங்கையில் இப்போது சீன ஈழம் உருவாவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தமிழ் மக்கள் தனியான அலகு கேட்டபோது பொங்கியெழுந்தவர்கள் சீனாவுக்கு நாட்டைத் அடகு வைக்கும்போது அடக்கி வாசிக்கின்றனர். சீனாவின் ஆதிக்கத்தால் தமிழர்களின் பிரச்சினை மீண்டும் சர்வதேசத்தால் கையில் எடுக்கப்படும் வாய்ப்புக்கள் உள்ளன. 2

## ரிஷாத் கைதுக்கும் அரசுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை!

### சட்டம் தன் கடமையைச் செய்யும் என்கிறார் பீரிஸ்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் எம்.பி., அவரது சகோதரரான ரியாஜ் பதியுதீன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டமைக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையும் அல்ல. சட்டம் தன் கடமையைச் செய்யும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா 2

# கதவுகள் திறந்துள்ளன; எவரும் வெளியேறலாம்



### ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் ஆவேசத்துடன் கூறினார் மஹிந்த

அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிக்கும் நபர்கள் அரசில் இருந்து வெளியேறி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் நேற்று ஆவேசத்துடன் தெரிவித்தார். 2

## சீன மொழி, கட்டமைப்புடன் வத்திராயனில் சிறுவர் பூங்கா




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப். 27

வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் தனி ஒருவரால் அமைக்கப்படும் சிறுவர் பூங்கா 2

### காங்கேசனில் 27 ஆண்டுகளின் பின்னர்

## படையால் விடுவிக்கப்பட்ட 8 பரப்பு இரவோடு இரவாக மீள ஆக்கிரமிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.27

காங்கேசன்துறை மத்தி கிராம சேவையாளர் பிரிவில் 2018ஆம் விடுவிக்கப்பட்ட நிலத்தை இரவோடு இரவாக இராணுவம் உரிமை கோரி அறிவித்தல் பலகையினை நாட்டியுள்ளது.

பருத்தித்துறை பொன்னாலை வீதியில் காங்கேசன்துறை மத்தி கிராம சேவகர் பிரிவில் 2



## கொரோனாச் சாவு 644ஆக அதிகரிப்பு

இலங்கையில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

களனிப்பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயதான பெண் ஒருவரும், பொலனறுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதான 2

## மறு அறிவித்தல் வரை மூடப்படும் திருமலை வலயப் பாடசாலைகள்

திருகோணமலை மாவட்ட கல்வி வலயப் பாடசாலைகள் நாளை முதல் மறு அறிவித்தல் வரையில் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுக்கும் நோக்கில் இந்த உத்தரவு 2



## நேற்றும் 793 பேருக்கு கொரோனாத் தொற்று

### மொத்தப் பாதிப்பு 101,379

இலங்கையில் மேலும் 793 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து ஆயிரத்து 379 2

# கட்டுக்கடங்காத கொரோனா வைரஸ் தொற்று; சுகாதார ஒழுங்கு விதிகளை மீறினால் கைது!



### பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று மேலும் வீரியமடைந்துள்ள நிலையில், சுகாதார ஒழுங்கு விதிகளை மீறுவோருக்குக் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பொது இடங்களில் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளிகளைப் பேணுதல் உள்ளிட்ட சுகாதார ஒழுங்கு விதிகளைக் கடுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி பொது இடங்களில் சுகாதார ஒழுங்கு விதிகளை மீறும் நபர்களைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் தீர்மானித்துள்ளனர் என்று பொலிஸ் 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எங்கோ 'சுட்டு', உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். அருட்தந்தை எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளார் இறைவனுக்குள் நித்திய ஜீவிதம் பெற்ற விட்டார். அவர் சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் தந்தை செல்வா பற்றி ஆற்றிய உரையில் இருந்து நான் சுட்டுக் கொண்டது இது.

இலங்கைத்தமிழர்களில் பெரும்பாலானோர் இந்துக்கள். அல்லது சைவர்கள். ஆனால் அவர்கள் தமது தந்தையாக – வழிகாட்டியாக – வரித்துக் கொண்டவர் அங்கிலிக்கன் திருச்சபையின் நெறிதவறாத ஒரு விசுவாசியை.

இதற்குள் ஓர் ஆழமான விவகாரம் புதைந்துள்ளது.

அரசியலுக்காவோ, செல்வாக்குக்காகவோ, மக்கள் ஆதரவைப் பெறுவதற்காகவோ மத ரீதியான விடயங்களில் தன்னும் நடித்தவர் அல்லர் தந்தை செல்வா. உண்மையும் நேர்மையும் மிக்கவராக விளங்கினார்.

தென்னிலங்கையில் கொடி கட்டிப் பறந்த அரசியல் குடும்பங்கள் பல பூர்வீகமாக அங்கிலிக்கன் திருச்சபையை வரித்துக் கொண்டவை. வட இலங்கையில் தந்தை செல்வாவின் குடும்பம் அங்கிலிக்கன் திருச் சபையில் முகிழ்ந்தமை போலத்தான் தென்னிலங்கையில் கொடிகட்டிப் பறந்த பிரதமர்களான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, டி.எஸ்.சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ரணில் விக்கிரம சிங்க போன்றோரின் குடும்பங்களும் அங்கிலிக்கன் திருச்சபையுடன் நெருங்கி வாழ்ந்தவை.

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பௌத்த, இந்துசமய சீர்திருத்தங்கள் தீவிரமடைந்த போது – குறிப்பாகத் தென்னிலங்கையில் பௌத்த, சிங்கள இனவெறி மேலாண்மை உச்சம் பெற்ற போது – பண்டாரநாயக்காக்கள், சேனநாயக்காக்கள், ஜெயவர்த்தனாக்கள், விக்கிரமசிங்கக்கள் அங்கிலிக்கன் திருச்சபையை விட்டு விலகி, மெல்ல நகர்ந்து, பௌத்த இனவெறி கொதித்துக் கொண்டிருந்த சட்டிக்குள் வீழ்ந்தனர்.

சந்திரிகாவின் தந்தையார் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா Why I become a Buddhist (நான் ஏன் பௌத்தனானேன்?) என்ற உப்புச்சப்பற்ற நூலை எழுதி தம்மை ஒரு பௌத்தராகக் காட்டிக் கொண்டார்.

தென்னிலங்கையில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கு பௌத்த, சிங்களத் தீவிர வெறி அவசியம் என்பதைப் புரிந்து கொண்ட இந்த அரசியல் தலைவர்கள் அதனால் தமது மூல மத விசுவாசத்தை ஒதுக்கி மூலையில் வைத்து விட்டு, சந்தர்ப்பவாதிகளாகி, பௌத்த இனவெறி என்ற கூழ்ச்சட்டிக்குள் வீழ்ந்து முழுதாக அதில் தோய்ந்து போயினர்.

ஆனால், நமது தந்தை செல்வா குறுகிய அரசியல் லாபத்துக்காக தமது மதத்தை – நம்பிக்கையை – விட்டுக் கொடுத்தாரல்லர். அதில் உறுதியாக – மிக உறுதியாக – இருந்தார்.

அது குறித்து, அருட்தந்தை எம்.எக்ஸ். கருணாரட்ணம் கூறுவதை வாசியுங்கள்:

"1972இல் புதிய இலங்கை குடியரசு அரசியல் யாப்பினை நிராகரித்து நாடாளுமன்றப் பதவியை துறந்தார் தந்தை செல்வா. பின்னர் ஏற்பட்ட காங்கேசன் துறைத்தொகுதி இடைத்தேர்தலில் புதிய யாப்பினை தமிழ் மக்கள் நிராகரிக்கும் ஒரு கருத்துக்கணிப்பாக வைத்துத் தேர்தலில் போட்டியிட்டார். அவ்வேளையில் அவரது தேர்தல் பிரசாரம் ஒரு பிரசித்தமான இந்துக் கோவிலில்தான் ஆரம்பமானது. அவ்வேளையில் இந்து சமயச் சடங்குகளுடன் கொடுக்கப்பட்ட பிரசாதத்தை 'நான் ஒரு கிறிஸ்தவன், இதை பெறுவது உங்கள் சமய நம்பிக்கைகளை அவமதிக்கும் ஒரு செயலாகும்' எனக் கூறி அதைப் பெற மறுத்து, தன்னை ஒரு வேத சாட்சி என்பதை நிரூபித்தார். அதே வேளையில் எல்லோருக்கும் சமய சுதந்திரம் வேண்டும் என்ற கிறிஸ்தவக் கோட்பாட்டையும் வெளிப்படுத்தினார். பெரும்பான்மையான இந்துக்களை அவமதித்துவிட்டார், இது இவரது தேர்தல் வெற்றிக்குத் தடையாகும் என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் தந்தை அத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரைப் பெருவெற்றி கொண்டார்."

என்னே... அதிசய மனிதர் இவர்!

தந்தை செல்வா 'ஒரு புனிதர்' ஆகத் திருநிலைப்படுத்தப்பட வேண்டும் என்றுரைத்தார் அருட்தந்தை கருணாரட்ணம்.

அந்த உரையில் அர்த்தம் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

## சீன ஆதிக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன்.

சங்கானையில் நேற்று நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

1980 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து தமிழ் இளைஞர்கள் தங்களை அர்ப்பணித்துச் செயற்பட்டனர். அவர்களின் அர்ப்பணிப்புகள் வீண் போகவில்லை. அவர்களின் அர்ப்பணிப்புகள் ஊடாகவே நாங்கள் இப்போது சர்வதேச கவனத்தைப் பெற்றிருக்கின்றோம். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் இந்தத் தீவில் இருந்து எப்போது தூக்கியெறிப்பட்டிருப்பார்கள். அதை நாம் மறந்துவிடுகின்றோம். ஆனால், அந்த வரலாறுகள் இளங்கலைஞர்களால் நினைவூட்டப்படுகின்றன. அது வரவேற்கத் தக்கது. எமது இளைஞர்களை சிறப்பான முறையில் நாம் வளர்க்க வேண்டும். அவர்கள்தான் எமது எதிர்காலத் தலைவர்கள்.

இப்போது கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பன மெல்ல மெல்ல ஒடுக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டம் எந்நேரமும், எவர் மீதும் பாயலாம் என்ற நிலைமையே இருக்கின்றது. இளைஞர்கள் தங்களை நெறிப்படுத்திச் செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

இப்போது நாட்டில் சீனாவுக்குத் தனி இடத்தைக் கொடுப்பதற்குத் தயாராகின்றனர். 216 ஹெக்ரெயர் பரப்பில் கடல் நிரவப்பட்டு நகர் ஒன்று உருவாக்கப்படுகின்றது. அதில் இலங்கைக்குச் சொந்தமானது 90 ஏக்கர் நிலம்தான். மிகுதி சீனாவுக்கே சொந்தம்.

அந்தப் பகுதிக்கு தனியான சட்டம் கொண்டுவருதற்கு முயன்றனர். நாடாளுமன்றம் கூடக் கேள்வி கேட்க முடியாதவாறு அந்தச் சட்டம் காணப்படுகின்றது என்று அறிய முடிகின்றது. இந்தச் சட்டம் நிறைவேறினால் இலங்கையில் சீன வழி பூட்டப் பிள்ளைகள் உருவாகலாம்.

இந்த நிலைமை இந்தியாவுக்கு ஏற்றதாக இல்லை. மேற்குநாடுகளுக்கும் ஏற்றதாக இல்லை. அதனால் தமிழ் மக்களின் பிரச்சினையைக் கருவியாக்கி மீண்டும் கையில் எடுக்கப்படும் சாத்தியங்கள் உண்டு.

தமிழ் மக்களை அரசு அரவணைத்துச் சென்றால் நாட்டை முன்னேற்ற முடியும். இவற்றை எல்லாம் உணராது நாட்டை அடகு வைக்க முயல்கின்றனர். இவற்றால் எழும் இன்னல்களுக்கு அரசு மட்டுமல்ல முழு நாடுமே விலை கொடுக்க நேரிடும் – என்றார்.

## மறு அறிவித்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்தால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## சீன மொழி, கட்டமைப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீனாவின் எழுத்துக்களில் அமைக்கப்படுவது தொடர்பில் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவில் ஓர் மணிக்கூட்டு கோபுரம் அமைக்க பிரதேச சபையிடம் அனுமதி பெறப்பட்டு அதற்கான பணிகள் இடம்பெறுகின்றன.

இருந்தபோதும் சீனாவின் மண்டபத்தை ஒத்த கட்டுமான அமைவிடம் தொடர்பில் அனுமதியில் வரைபடம் சமர்ப்பிக்காத நிலையில் ஓர் நான்கு தூண்களில் சிறு மண்டபமாக அமைக்கப்பட்டு சகல தூண்களிலும் சீன மொழியில் எழுதப்பட்டுள்ளமையோடு முகப்பிலும் அதேவாறு எழுதப்பட்டுள்ளது.

அதில் சீன மொழியில் எழுதப்பட்டுள்ள விடயமும் புரியாத தன்மையால், நாட்டில் ஏற்கனவே தமிழ் – சிங்கள மொழிப் பிரச்சினை இருக்கும்போது தற்போது மூன்றாவது மொழியாக சீன மொழிப் பிரச்சினையா என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.



## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 644 ஆக உயர்ந்துள்ளது.

## படையால் விடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) .

இராணுவத்தினரின் பிடியில் 27 ஆண்டுகள் இருந்து 2018ஆம் விடுவிக்கப்பட்ட நிலமே இவ்வாறு இரவோடு இரவாக இராணுவம் உரிமை கோரி அறிவித்தல் பலகையினை நாட்டியுள்ளது.

இருவருக்கு உரித்தான 8 பரப்புக் காணியே இப்படி மீளவும் ஒருதலைப்பட்சமாக, வல்வந்தமாக ஆக்கிரமிக்கப்படுகின்றது. இப் பகுதி விடுவிக்கப்பட்ட பின்பு காணி உரிமையாளர்கள் துப்பரவுப் பணியில் ஈடுபட்டதோடு இதன் அருகே காணப்பட்ட வீதியை பிரதேச சபையும் புதிதாக அமைத்து வழங்கியிருந்தது.

இந்த நிலையிலேயே குறித்த நிலம் தற்போது இராணுவம் மீண்டும் கையகப்படுத்த முனைவதாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

## கதவுகள் திறந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசில் இருந்து வெளியேற நினைப்பவர்களுக்காகக் கதவுகள் திறந்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசாக எடுக்கும் தீர்மானங்கள் சகலரையும் சார்ந்ததாகும். அரசுக்குள் இருந்து கொண்டு அரசை விமர்சிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல.

அரசை விமர்சிக்கும் ஜனநாயக உரிமை சகலருக்கும் இருக்கின்றது. எனினும், ஆட்சியாளர்கள் அல்லது ஆளும் கட்சிக்குள் உள்ள அமைச்சர்கள், உறுப்பினர்கள் அரசை மோசமாக விமர்சித்து நெருக்கடிகளை ஏற்படுத்துவதானது, ஆட்சியைக் கொண்டு செல்லக் கடினமானதாக அமையும்.

அரசில் இருந்து வெளியேற நினைப்பவர்களுக்காகக் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். அவர்கள் வெளியில் சென்று தமது விமர்சனக் கருத்துக்களை முன்வைக்க முடியும் – என்றார்.

## நேற்றும் 793...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேலும் 156 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில், தொற்றிலிருந்து மீண்டோரின் எண்ணிக்கை 94 ஆயிரத்து 311ஆகப் பதிவாகியுள்ளது.

6 ஆயிரத்து 424 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## கட்டுக்கடங்காத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேச்சாளர் அஜித் ரோஹண ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு உள்ளிட்ட நகர் பகுதிகளில் முகக் கவசம் அணியாது சுற்றித் திரிந்த சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

வீட்டில் இருந்து வெளியே வரும்போது முகக் கவசங்கள் அணிவது கட்டாயம் எனவும், ரயில்கள், பஸ்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்தில் பயணிக்கும் போது மறக்காது முகக் கவனத்தை அணிந்து சமூக இடைவெளியைப் பேண வேண்டும் எனவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, பஸ்களில் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லுதல், சுகாதர அதிகாரிகளின் அனுமதியின்றி நடத்தப்படும் நிகழ்வுகள் தொடர்பாகவும் பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர் எனவும், இவ்வாறாக ஒழுங்கு விதிகளை மீறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## ரிஷாத் கைதுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுஜன முன்னணியின் தவிசாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீனும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கைது நடவடிக்கைக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையும் அல்ல.

எதிர்க்கட்சியினரும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் ரிஷாத் மற்றும் அவரது சகோதரர் கைது தொடர்பில் அரசு மீது வீண்பழி சுமத்துகின்றனர். சட்டம் தன் கடமையைச் செய்யும்; இதில் அரசின் தலையீடு இருக்கவேமாட்டாது என்பதை அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும்.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் கைதுசெய்யப்பட வேண்டும், குற்றவாளிகள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும், நீதி கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்ற பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகள் சட்ட நடவடிக்கைகளூடாக நிறைவேறியே தீரும். இதில் அரசு உறுதியாக இருக்கின்றது – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முடக்கலுக்குச் சென்றால் பொருளாதாரம் பாதிக்கப்படும்

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

கொவிட் நோய்த் தொற்று பிரச்சினைக்கு இறுதித் தீர்வு தடுப்பூசி மாட்டுமே ஆகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது மக்களின் பொறுப்பு என்றும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜனாதிபதி தெரிவித்துள்ளவை வருமாறு:-

கொவிட் 19 நோய்த் தொற்றுப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு தடுப்பூசி மட்டுமேயாகும். மக்களுக்குத் தடுப்பூசியை பெற்றுக் கொடுப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்று அரசாங்கத்திடம் உள்ளது. இந்தச் சவாலை சிறப்பாகப் வெற்றி கொள்வதற்கு கொவிட் நோய்த் தொற்று பரவிய முதல் சுற்றின்போது செய்ததைப் போன்று சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்துள்ள அனைத்து சட்ட திட்டங்கள், வழிகாட்டல்களை மக்கள் முழுமையாகப் பின்பற்ற வேண்டுமென்று ஜனாதிபதி கேட்டா பய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார தாபனம் தற்போது அங்கீகரித்துள்ள மற் றும் எதிர்காலத்தில் அங்கீகாரம் வழங்க உள்ள கொவிட் ஒழிப்பு தடுப்பூசிகளில் நான்கு தடுப்பூசிகளை இலங்கைக்குப் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளை செய்துள்ளது. முதலில் கொண்டுவரப்பட்ட அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசி 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு இதுவரையில் வழங்கப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசியின் இரண்டாவது கட்டம் மே மாதம் முதலாம் வாரத்தில் வழங்கப்படவுள்ளது. முன்னணி சுகாதார அதிகாரிகள், கொவிட் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 3 லட்சத்து 56 ஆயிரம் பேருக்கு இரண்டாவது கட்டம் வழங்கப்படும்.

எஞ்சிய தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு அஸ்ட் ராசெனக்கா தடுப்பூசி உற்பத்திசெய்யும் உலகில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் அரசாங்கம் தற்போது கலந்து ரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது.

ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஸ்புட்னிக் தடுப்பூசி 2 லட்சம் ஏப்ரல் மாதம் இறுதியிலும் 4 லட்சம் தடுப்பூசிகள் மே மாதத்திலும், 8 லட்சம் தடுப்பூசிகள் ஜூன் மாதத்திலும் 12 லட்சம் தடுப்பூசிகள் ஜூலை மாதத்திலும் கொண்டு வரப்படும். ஒரு கோடியே 30 லட்சம் ஸ்புட்னிக் தடுப்பூசிகளை கொண்டு வருவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அன்பளிப்பாக சீனாவிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள 6 லட்சம் செனோபாம் தடுப்பூசிகள் எதிர்வரும் சில வாரங்களில் உலக சுகாதார தாபனத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் நாட்டு மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அரச ஔடத கூட்டுத்தாபனம் பைசர் தடுப்பூசியை கொண்டு வருவதற்கு தேவையான ஆரம்ப உடன்படிக்கைகளில் தற்போது கைச்சாத்திட்டுள்ளதுடன், அவற்றை மிக விரைவில் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கொவிட் 19 நோய்த் தொற்றுப் பரவலை ஒழிப்பதில் முக்கிய இடம் வகிப்பது மக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதாகும் என உலக சுகாதார தாபனத்தின் தலைவர் ஜெனிவாவில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

உரிய முறையில் முகக் கவசங்களை அணிவது, சவர்க்கா ரம் அல்லது தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தி அடிக்கடி கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல், தேவையற்ற பயணங்கள் மற்றும் விழாக்கள் போன்றவற்றில் இருந்து தவிர்ந்து இருப்பது இவற்றில் முக்கியமானதாகும்.



சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது, ஒழுக்கப்பண்பாடான சமூக நடத்தைகள், வைரஸ் தொற்றை தடுப்பதற்கு சிறந்த தீர்வாகும் என்பது அநேக நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமான அனுபவமாகும்.

கொவிட் 19 பிரச்சினைக்கு தீர்வாக சிலகாலம் நாட்டை மூடி வைக்க வேண்டுமென சிலர் எண்ணுகின்றனர். ஆரம்ப காலகட்டங்களில் அத்தகைய நடைமுறையின் மூலம் திருப்தியான பெறுபேறு கிடைக்கப்பெற்றபோதும் நீண்ட காலத்தில் அது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பொருளாதாரத்திற்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். பொருளாதார செயற்பாடுகளை முற்றாக முடக்கிவிடக் கூடிய வகையில் ஊரடங்கு சட்டத்தை பிறப்பிப்பது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு செய்ய முடியாது. எமது நாட்டின் வருமானம் ஈட்டும் பெரும்பான்மையானவர்கள் ஒழுங்குபடுத்தப்படாத வாழ்வாதார வழிகளில் தங்கியுள்ளனர்.

எனவே அரசாங்கம் தனது பணிகளை மேற்கொண்டு வருவதுடன், மக்களும் நாட்டினதும் தம்முடையதும் நலனைக் கருத்திற்கொண்டு தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் விபத்து; 9 வயதுச் சிறுமி சாவு

வவுனியா இரட்டைப் பெரியகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒன்பது வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து, நேற்று (ஞாயிற்றுக் கிழமை) காலை ஏற்பட்டதுடன் இதன்போது, சிறுமியின் தாயார் உட்பட இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாயும் குறித்த சிறுமியும் சிதம்பரபுரம் வைத்தியசாலைக்குச் சென்று மருந்து எடுத்துவிட்டு கல்குண்ணாமடுப் பகுதியில் உள்ள அவர்களது வீடுநோக்கி சென்றுள்ளனர்.

இதன்போது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் இவர்கள் சென்ற ஓட்டோவுடன் மோதிய நிலையில் சிறுமி தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கல்குண்ணாமடுவைச் சேர்ந்த ஆகாசா ரசினி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார், விபத்து தொடர்பாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# சந்தேக நபர்கள் நால்வர் துப்பாக்கிகளுடன் கைது

குருவிட்ட மற்றும் அவிசாவளை பகுதிகளில் கடந்த சனிக்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கியுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி -குருவிட்ட பகுதியில் குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட குழல் 12 ரக துப்பாக்கியுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகத்திற்கிடமான ஓட்டோவை அவதானித்துள்ள குற்றப்புலனாய்வு பிரிவினர் அதிலிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட குழல் 12 ரக துப்பாக்கி ஒன்றையும், அதன் இரு தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இரத்தினபுரி மற்றும் குருவிட்ட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 37, 42, 49 ஆகிய வயதுடைய மூன்று பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேவாயின்ன பகுதியில் குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போது உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹேவாயின்ன பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# பன்னல பகுதியில் வெடிப்பு சம்பவத்தில் இருவர் காயம்

இப்பாகமுவ, பன்னல பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் காயமடைந்த 22 மற்றும் 27 வயதுடைய இளைஞர்கள் தற்சமயம் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பட்டாசினுள் உள்ள வெடி மருந்துகளை அகற்றி அவற்றை இரும்பு குழாய் ஒன்றில் செலுத்தி அதனை மின்சார கிரைண்டரை கொண்டு வெட்ட முற்பட்டபோது இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய மீனவரின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காணப்படல் வேணடுமாம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடி செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற இந்திய படகுகளை கைது செய்யுமாறு கடற்படைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் இரு நாடுகளுடன் தொடர்புடையது என்பதால் , இராஜதந்திர ரீதியிலேயே இதற்குத் தீர்வு காண வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தேசிய மீனவர் சம்மேளனத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்த அமைச்சர் அங்கு மேலும் குறிப்பிடுகையில் –

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்குத் துணை போகிறேன் சில ஊடகங்கள் என்மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்திவருகின்றன. இந்திய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட சில ஆலோசனைகள் தொடர்பாகவே நான் கருத்துத் தெரிவித்திருந்தேன். அந்தக் கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவின் ஆலோசனை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீன்பிடி படகுகளைக் கைதுசெய்யுமாறு நான் தொடர்ந்து கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கி வருகின்றேன்.

இந்தப் பிரச்சினை இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்டதாகும். இதனை இராஜதந்திர முறையிலேயே தீர்க்க வேண்டும். நான் ஒரு தமிழ் அரைமச்சராக இருந்த போதும் , ஜனாதிபதியும் பிரதமரும் என்மீது நம்பிக்கை வைத்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சை வழங்கியுள்ளனர்.

எனவே அனைத்து இனங்களுக்கும் எவ்வித பாகுபாட்டையும் காண்பிக்காமல் சேவையாற்றுவேன். கடற்றொழிலாளர் தற்போது எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்காக உரிய தீர்வை நிச்சயமாகப் பெற்றுக் கொடுப்பேன்.

கடற்றொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்பட மாட்டாது. என்னுடைய தவறுகளைக் சுட்டிக் காட்டினால் , அதில் உண்மை இருந்தால் நான் மன்னிப்பு கேட்கவும் தயங்க மாட்டேன். ஆனால் பொய்க் குற்றச்சாட்டுகளை ஒரு போதும் பொருட்படுத்தப் போவதில்லை. - என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காலத்தை வென்ற தந்தை

பௌத்த, சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையின் வரலாற்றுப் பெறுபேறாகப் பிறப்பெடுத்ததே தமிழர் தேசிய உணர்வு.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒன்றுபட்ட கூட்டுணர்வு எழுச்சியாகவும், அவர்களின் தனித்துவத் தேசிய சிந்தனை பற்றிய எழுச்சிக் கோலமாகவும் அதைப் பிறப்பெடுக்க வைத்த பிதாமகர் நம் தந்தை சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள். 'தந்தை செல்வா' என்றும் 'ஈழத்து காந்தி' என்றும் அழைக்கப்பட்ட அந்தப் பெருமகனாரின் 44ஆவது வருட நினைவு தினம் இன்றாகும்.

நீதி, நியாயம், தர்மம், சுதந்திரம், கௌரவம், பிறப்புரிமை போன்ற ஆழமான அபிலாஷைகளை வேண்டி வெளிப்படுத்தி நின்ற முற்போக்கான சிந்தனை வடிவமாக தமிழர் தேசிய உணர்வு எழுச்சி பெற்றது.

தமிழ் மக்களின் சகல வகுப்பாரையும், சகல தரப்பினரையும் ஒன்று திரளச் செய்து, தமிழர் தேச விடுதலை என்ற திசையில் ஒன்றித்துச் செயற்படத் தூண்டியமையால் அது நமது இனத்துக் கிட்டிய முற்போக்கு வழி நடத்தல் சிந்தனையாக அமைந்தது.

அதைத் தூண்டி, மலர வைத்த பெருமகனார் தந்தை செல்வநாயகம்.

தமிழர்களின் அரசியல் வரலாற்றுப் படிமுறை வளர்ச்சியை நோக்குபவர்கள் ஒரு விடயத்தை அவதானிக்க முடியும்.

அது – தமிழரின் தேசிய உணர்வெழுச்சியானது முதன் முதலில் நிறுவன வடிவம் எடுத்தது தந்தை செல்வா தோற்றுவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடாகவே என்பதுதான்.

பெரும் களேபரங்களையும், போராட்டங்களையும், கொடூர யுத்தங்களையும், பேரழிவுகளையும் நமது இனம் கடந்து விட்ட போதும், அவற்றுடன் சேர்ந்து பயணித்து, அவற்றை எல்லாம் எதிர்கொண்ட பின்பும், இன்னும் தமிழ் மக்களின் எழுச்சிக் கட்சியாக – கட்டமைப்பாக – தமிழரசு விளங்குகின்றது என்றால், அதற்கு ஒரே காரணம் அதன் ஸ்தாபகரின் நன்னோக்கு மட்டுமே.

தமிழ்த் தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லவல்ல பலம் மிக்க சக்தியாக அதைத் தோற்றுவித்தார் தந்தை செல்வா. தமிழினத்தின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் தேசிய சக்தியாக அக்கட்சியை அவர் வழி நடத்தினார்.

வெவ்வேறு சாதிகளாகவும், வர்க்கங்களாகவும், மதப் பிரிவுகளாகவும் பிளவுபட்டு நின்ற தமிழர்களைத் தமிழ்த் தேசியம் என்ற ஒரு குடையின் கீழ் ஐக்கியப்படுத்தி, அதனைப் பேரெழுச்சி மிக்க இயக்கமாக வழி நடத்திச் செல்லும் அரிய செயலை, அந்த அற்ப – எளிய – மென்மையான – பலவீனமான – மனிதராகத் தோன்றிய தந்தை செல்வாவால் ஆற்ற முடிந்தது.

தமிழ் மக்களின் தன்னாட்சிக்கான சமஷ்டி வடிவத்துக்கு அந்த மக்களின் ஏகோபித்த ஆதரவைத் திரட்டி உலகுக்குக் காட்ட தந்தை செல்வாவின் தலைமையால் முடிந்தது. தமிழ் மக்களின் அந்த அபிலாஷையை நிலை நிறுத்தும் வெற்றிக்காக காந்தீய முறையில் – அகிம்சை வழியில் – அறநெறிப் பாதையில் – வெகுஜன எழுச்சிப் போராட்டங்களை அவரின் வழிகாட்டலில் உணர்வுடன் நடத்த இயலுமாயிற்று.

உண்மையைக் கூறுவதானால் தமிழ்த் தேசிய உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் எழுச்சிப் பிரவாகம் எடுத்து, மாபெரும் வெகுசனப் போராட்டங்களாக அது வடிவெடுத்தமைக்கு ஈழத்து காந்தி என்ற தந்தை செல்வாவே மைய விசையாக இருந்தார்.

தமிழர் தேசிய எழுச்சி, பிற்காலத்தில் மாபெரும் வெகுசனப் பொங்குணர்வாகவும், தேசியப் பேரெழுச்சியாகவும் வடிவம் கொள்வதற்கான அரசியல் களச்சூழ்நிலையை ஒழுங்குபடுத்தி, பண்படுத்தியது தந்தை செல்வாவின் தலைமைத்துவம்தான்.

ஒடுக்கப்பட்ட மக்களின் சாத்வீகப் போராட்டங்களுக்கு வடிவம் கொடுத்து வழிகாட்டிய சிற்பி தந்தை செல்வாவே.

எந்த வேளையிலும், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுகளுக்கு அவர் தயாராக இருந்தார். அதற்கான விட்டுக் கொடுப்புகளுக்கும் அவர் இணங்கினார். எனினும் – எந்தச் சமயத்திலும் – அந்தப் பலவீனமான மனிதர், தமிழர் தாயகக் கோட்பாட்டை விட்டுக்கொடுக்காதவராக, அந்தக் கொள்கையில் இரும்பை ஒத்த வலிமையுடையவராக நின்றார்.

சிங்கள, பௌத்த பேரினவாதம் தமிழர்களுக்கு எதையும் கொடுக்கத் தயாரில்லை என்ற உண்மையைத் தந்தை செல்வாவின் அரசியல் ஞானம்தான் – வெகுஜன நடவடிக்கைகள் தாம் – உலகுக்கு எடுத்துக்காட்டியது.

பின்னாளில் தமிழர் தேசம் நடத்திய மறப்போருக்கான நியாயத்தை உலகுக்கு எடுத்தியம்பி நிலை நிறுத்தியது தந்தை செல்வா நடத்திய அறவழிப் போராட்ட நடவடிக்கைகள் தாம் என்றால் மிகையாகாது.

ஈழத் தமிழர்களின் விடுதலை வரலாற்றில் வழிகாட்டும் துருவ நட்சத்திரமாக – விடிவெள்ளியாக – புனிதராக – விளங்குகின்றார் அந்த மாமனிதர் தந்தை செல்வா.

# தாயாருக்கு பிதிர்த் தர்ப்பணம் செய்யும் சித்திரா பௌர்ணமி விரதம் இன்றாகும்




உலகளாவிய ரீதியில் இன்றைய தினம் இந்துக்களால் சித்திரா பௌர்ணமி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

சித்திரா பௌர்ணமி என்பது சித்திரை மாதம் பௌர்ணமி திதியில் சித்திரை நட்சத்திரமும் கூடி வருவதால் சித்திரா பௌர்ணமி என அழைக்கப் பெறுகின்றது.

மாதத்தின் பெயரும் நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி (சந்திரன் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கையில்) சூரியன் உச்ச பலம் பெறும் மேட இராசியில் (சித்திரை மாதத்தில்) வரும் பௌர்ணமி தினம் சிறப்புப் பெறுகின்றது.

இந்நாளில் தாயாரை இழந்தவர்கள் தனது தாயாருக்கு பிதிர் தர்ப்பணம் செய்வது சிறப்பாகும். சித்ரா பௌர்ணமி விரதம் இருந்தால் பிரம்மஹத்தி தோஷம் பிடித்தவர்கள் தோஷம் நீங்கும்.

சித்திர குப்த நாயனாரை வேண்டி சைவர்கள் விரதமிருந்து வழிபடும் நாளாகவும் சித்ரா பௌர்ணமி இருக்கிறது. அவர் தங்களின் பாவக் கணக்குகளைக் குறைத்து நற்கணக்குகளை அதிகமாக்குவார் என்பது நம்பிக்கையாகும்.

இந்நாளை சித்திரகுப்தன் பிறந்தநாள் என்றும் சித்திர குப்தனின் திருமண நாள் என்றும் இரு வேறு நம்பிக்கைகள் உள்ளன.

அம்மன் ஆலயங்களில் சித்திரைக் கஞ்சி படையல் செய்து மக்களிற்கு வழங்குவதன் மூலம் அம்பிகையின் சீற்றத்தை, கோபத்தை தணிப்பதனால் அம்பிகையின் சீற்றத்தால் ஏற்படும் அம்மன் வருத்தம் (கொப்பளிப்பான், சின்னம்மை போன்றவை) ஏற்படாது என்பது ஐதீகம்.

அம்மன் ஆலயங்களில் குளிர்த்தி சோறு படையலிட்டு கொண்டாடப்படுவதும் சிறப்பாகும்.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் சித்திரா பௌர்ணமியன்று அம்மனிற்கு பூப்போட்ட வஸ்திரம் சாத்தி, புஸ்பராகம் என்ற நவரத்தினக்கல் பதித்த ஆபரணம் அணிவித்து, மஞ்சள் கலந்த சாதம், பானகம், ஏலம், கிராம்பு, பச்சைக் கற்பூரம் சேர்த்த தாம்பூலம் நைவேத்தியம் செய்ய வேண்டும். இப்படி அம்மனை பூசித்தால் குழந்தைப் பாக்கியம் கிட்டும். அம்மன் ஆலயங்களில் இப்படியான ஒரு பூசைக்கு ஏற்பாடு செய்யலாம். முடியாத பட்சத்தில் தங்கள் வீடுகளிலேயே அம்மன் படத்திற்கு அல்லது அம்மன் விக்கிரகத்திற்கு இந்த முறையில் பூசை செய்து குழந்தை வரம் வேண்டி வேண்டிக் கொள்ளலாம்.

சித்ரா பௌர்ணமி தினத்தில் பெண்கள் விரதமிருந்து சித்திர குப்தனைப்போல மாக்கோலம் போட்டு, ஏடு, எழுத்தாணி வைத்து விளக்கேற்றி பூஜை செய்து பொங்கலிட்டு பெண்கள் வழிபாடு செய்யும் ஒரு முறையும் உள்ளது. பாவங்களிலிருந்து விடுபடவும், நரகத்திற்கு போகாமலிருக்கவும் இந்த விரதம் மேற்கொள்கின்றனர்.

வீட்டின் பூசை அறையில் சித்திர குப்தனைப்போல மாக்கோலம் போட்டு, அதன் பின் விநாயகர் படத்தினை வைக்க வேண்டும். காய்கறிகளும், பருப்பும், தயிர் கடையும் மத்தினையும் வைக்க வேண்டும். விநாயகரிற்கும், சித்திர புத்திரனாரிற்கும் சர்க்கரைப் பொங்கல் அல்லது வெண் பொங்கல் படையலிடுகின்றனர். திருமணமாகாத பெண்கள் திருமணத்தடை நீங்கி நல்லவரன் கிடைக்க வேண்டுமென விரதமிருந்து இந்தப் பூசை முறையைக் கடைப்பிடிக்கிறார்கள்.

உப்பில்லாமல் உணவருந்தி விரதமிருப்பது சிறப்பான பலனைத்தரும். பால், நெய், தயிர் தவிர்ப்பதும் நல்லது. விரதமிருப்பவர்கள் உப்பில்லாமல் கதம்பச் சாதம் உண்பது நல்ல பலனைத்தரும்.

சித்திர புத்திரன் – சித்திர குப்த நாயனார்.

இவ்வுலகின் பாவ புண்ணி பலனை அறிய சிவபெருமான் பார்வதி தேவியின் மூலம் தங்கப்பலகை கொண்டு வரச் செய்து அதில் சித்திரம் ஒன்றை வரைந்தார். இதனை கண்டு அதிசயித்த பார்வதி இந்த சித்திரத்தை பேச வைக்க சிவனிடம் வேண்டினார். சிவனும் மந்திர உபதேசம் செய்து அந்த சித்திரத்திற்கு பேசும் சக்தியை கொடுத்து சித்திரபுத்திரன் என்ற பெயரும் வைத்தார். இந்த நிகழ்வு நடந்தது –அதாவது சித்திர புத்திரன் (சித்திர குப்தன்) அவதரித்தது சித்திரா பௌர்ணமி தினத்தில் தான். சிவபெருமான் சித்திர புத்திரனாரிற்கு அண்டசராசரங்களிலுள்ள அனைத்து சீவரா சிகளினதும் பாவ புண்ணிய கணக்குகளை யும், பிரம்மா, விஷ்ணு முதலானவர்களுடைய பாவ புண்ணிய கணக்குகளையும் தினமும் தமக்குத் தெரிவிக்கும்படி உத்தரவு பிறப்பித்திருந்தார். அதன்படி சித்திர புத்திரனார் கயிலையிலிருந்து கொண்டு கணக்குகளை எழுதிவந்தார்.

ஒரு சமயம் தேவேந்திரன் தனக்கு மக்கட்பேறு வேண்டுமென்று இறைவனை நோக்கி தவம் புரிந்தான். சிவபெருமான் காமதேனுவை அழைத்து இந்திரன் தவத்தை கூறினார். சித்திரபுத்திரரை இந்திரனுக்குப் புத்திரனாகப் பிறந்து அவன் கவலையைத் தீர்க்குமாறு கட்டளையிட்டார். அதன்படியே சித்திரபுத்திரனார் காமதேனுவின் வயிற்றில் உதித்தார். இந்த சித்திரபுத்திர நாயனார் கதை சித்ரா பௌர்ணமி அன்று ஆலயங்களில் படிக்கப்பட்டு வருகிறது.

# ஆபத்தான பயங்கரவாதத் தடைச்சட்டம் ரிஷாத் கைதுக்கான முக்கிய காரணம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டமைக்கு தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் கண்டிக்கப்பட்ட மிகவும் ஆபத்தான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டமையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடுமையாகக் கண்டிக்கின்றது என அவர் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது பதிவில் -

இந்த கைது இடம்பெற்ற விதம் - பொலிஸ் ஆட்சியிலுள்ள கட்சியின் ஒரு பகுதியாக இயங்கும் நாட்டில் இடம்பெறும் அரசியல் நோக்கத்தின் அடிப்படையிலான கைதுகளைப் போன்றே இது இடம்பெற்றது என்பதை வெளிப்படுத்தும் அனைத்து வழிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி என்ற அடிப்படையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீதி ஒருபோதும் வழங்கப்படாது என்பதை தயக்கமின்றி தெரிவிக்க முடியும்.

மாறாக நாடு அநீதியின் பாரம்பரியங்களுடன் விடப்படும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் மற்றும் நீதி நடவடிக்கைகள் தொடர்பாக அனுபவங்கள் ஆதாரங்கள் அற்றநபர்களைத் தண்டிப்பதற்கான கருவியாக அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது என்பதை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் நேர்மையைப் போதித்த உத்தம தலைவர் தந்தை செல்வா

“ எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமது குருதி யை எடுத்துத் தந்தைக்குப் பாய்ச்சுங்கள் என்றார்.



தந்தை செல்வ 1977 ஆம் ஆண்டு ஏப்ரல்மதம் 26 ஆம் திகதி இரவு இவ்வுலக வாழ்வை நீத்தார். தலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையைத் தொடர்ந்து ஒரு மாதம் மயக்க நிலையிலிருந்த தந்தை செல்வாவிற்கு உதவி செய்யப் பலர் முன்வந்தனர். கலைஞர் மு.கருணாநிதி தமிழ் நாட்டிலிருந்து ஒரு விசேட நரம்பியல் நிபுணரை அனுப்பிவைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமது குருதியை எடுத்துத் தந்தைக்குப் பாய்ச்சுங்கள் என்றார். யாழ் அரசினர் வைத்தியசாலை வைத்தியரும் தாதியரும் தந்தை செல்வா மீதிருந்த பேரன்பினால் இரவு பகல் பாரது அவரக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஆனால் நீண்ட காலமாகப் பார்க்கின்சன் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த உடலினால் 79 வயதிற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. எனவே மயக்க நிலையிலிருந்து மீளாமலேயே தந்தை செல்வா நம்மை விட்டுப் பிரிந்து சென்றார்.

யாழ் வைத்தியசாலையின் சேவை அளப்பரியது. தந்தையின் உடலைப் பொறுப்பேற்ற அவரது மகன் சந்திரகாசன் அவர்கள் ‘உலகில் எவருக்குமே கிடைக்காத பராமரிப்பு என் தந்தைக்குக் கிடைத்தது ’ எனக் கண்ணீர் மல்கக் கூறினர்.

அவரின் பூதவுடல் தெல்லிப்பளை அமெரிக்க மிஷன்தேவலயத்தில் இறுதி ஆரதனை நடைபெற்றபின் ஊர்வலம், பதினொரு மைல் தொலைவிலிருந்த யாழ் முற்றவெளி நோக்கி நகரலாயிற்று.

நேர்மையை மதிக்கின்ற தமிழ் மக்கள், செய்நன்றி மறவா தமிழ் மக்கள், நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் அமைதி அமைதியாக வந்து இந்த அமெரிக்க மிஷன் கிறிஸ்தவருக்கு அஞ்சலி செலுத்தினர். ஊர்வலம் எங்கும் ‘ஐயோ! ஐயோ!!’ என்ற அவலக்குரல்.

ஊர்வலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை திரு.சபாரத்தினம் தமது நூலில் பதிவு செய்துள்ளார். ஊர்வலத்தைப் பார்க்க சில வாலிபர்கள் ஒரு பூவரசக்கிளை மீது ஏறி நின்றனர். அக்கிளை முறிந்து போகும் நிலையிலிருந்தது. அவர்களைப் பார்த்த வயோதிபர் ஒருவர் ‘முறிஞ்சு விழுந்து கை கால் முறிக்க போறியள்’ என்று எச்சரிக்கை செய்தார். அப்பொழுது அந்த வாலிபர்கள், ‘பெரியவரே போய்ட்டர் நாங்கள் விழுந்து முறிஞ்சாலென்ன?’ என்று உணர்ச்சி ததும்பக் கூறினராம்.

முற்றவெளியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் இலங்கையின் மூத்த அரசியல்வாதிகள் பலர் பேசினர். டாக்டர் என்.எம். பெரெரா தமது உரையில் பின்வருமாறு கூறினார்:-

‘‘அமரர் செல்வநாயகம் தனிமனிதனாக மட்டும் காட்சியளிக்கவில்லை . இச்சகாப்பதத்தின் புதுயுகம் ஒன்றை உருவாக்க உழைத்த பெரியார். அவர் தமிழ் இனத்துக்கு மட்டுமன்றி தலைவரல்லர். இலங்கை அரசியல் வானில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் விளக்காக அவரை நான் மதிக்கின்றேன்” என்றார்.

பீட்டர் கெனமன் தமது அனுதாபச் செய்தியில், “அவர் நாடாளுமன்றத்திற் பேசும் போது சத்தமே இருக்காது. அவர் சொல்பவற்றை மிகவும் மரியாதையுடன் கேட்போம். தேசிய சிறுபான்மையினரின் குரலாக அவர் மதிக்கப்பட்டார்.” – என்று குறிப்பிட்டார்.

பத்திரிகைகள் அவர் நேர்மைத்திறனை வியந்து போற்றின. தமிழ் மக்களை அதிகம் நேசிக்காத ‘சன்’ பத்திரிகை கூட அவரைப் போற்றத்தயங்கவில்லை.

சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகம் ஒரு தனித்தன்மை வாய்ந்த மனிதர். அவர் அரசியலுக்காய் பெருஞ்சொத்தை இழந்தவர். தலைசிறந்த வழக்கறிஞராக நாற்பதுகளில் மாதம் 10,000 ரூபா சம்பாதித்தவர். அவர் மற்ற அரசியல்வாதிகளைப் போலல்லாது சொத்துச் சேர்க்காது இறந்தார். தங்களின் நன்மைக்காகப் போராடிய தலைவனை இழந்துவிட்டமைக்காக தமிழ் மக்கள் துக்கம் அனுஷ்டிக்கின்றனர். எவருக்கும் விட்டுக் கொடுக்காத ஒரு தலைமகனை இழந்துவிட்டதற்காக இலங்கை ஆழ்ந்த துக்கத்தை அனுஷ்டிக்கின்றது

தந்தை செல்வா எதைத்தான் சாதித்தார் என்று விமர்சனங்கள் இப்பொழுது எழுகின்றன. அவர் நமக்கு இரண்டு கொடைகளை வழங்கிப் போயிருக்கின்றார். அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூடை போல சிதறிக்கிடந்த தமிழ் இனத்தை ஒன்று சேர்த்தார். அவர் அரசியலில் பிரவேசித்த காலம் பிரதேசவாதம், சமயக்காழ்ப்பு சாதியுணர்வுகள் என்பனவற்றின் குரல்கள் ஓங்கி ஒலித்தன. ஆனால் அவர் இறக்கின்ற பொழுது இந்தக் குரல்களெல்லாம் அடக்கிப் போயின. தமிழினம் ஒரே குரலில் பேசியது.

இரண்டாவதாக, அரசியலில் நேர்மை என்பது அவர் நமக்கு அளித்த அருங்கொடை. மற்றவர்கள் வாக்கு தவறலாம். நாம் சொன்னதைச் செய்வோம், ஏமாற்ற மாட்டோம் என்று தமது சீரிய வாழ்வினால் எடுத்துக்காட்டியவர் தந்தை செல்வா. இந்த மகான் மறைந்து 44வருடங்கள் கடந்துவிட்டது. இப்படி ஒரு தலைவர் நமது சமுதாயத்தில் இனித் தோன்றுவாரா என்பது சந்தேகமே.



“நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்திற்குள் பிரவேசித்து தமது படுக்கைகளில் இளைப்பாறுகின்றனர்.” கிறிஸ்தவ வேதாகமம் ஏசா 57:2.

பேராயர் எஸ். ஜெபநேசன்
தலைவர்
தந்தை செல்வா அறங்காவல் குழு

# யாழில் கர்ப்பிணிப் பெண் சாவு; கணவரை கைதுசெய்ய உத்தரவு

எரிகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 8 மாதம் நிரம்பிய கர்ப்பிணிப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பெண் மண்ணெண்ணெய் ஊற்றி தன்னைத் தானே எரியூட்டினார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்ட போதும் அவரது உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதால் கணவனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார், பொலிஸாருக்குப் பணித்தார்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சிந்துயன் ரிசிக்கா (வயது - 19) என்ற பெண்ணே உயிரிழந்தார். திருமணமாகிய ஒருவருடம். அவர் 8 மாதம் நிரம்பிய கர்ப்பிணிப்பெண். கடந்த 17ஆம் திகதி அவரது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி எரியூட்டப்பட்ட எரிகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த 6 நாள்களாக அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். அவரது உடலில் தீ காயங்கள் ஏற்பட்டமையில் சந்தேகம் இருப்பதாகவும் கணவனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் பொலிஸாருக்குப் பணித்தார்.

# ஞானசாரரை படுகொலை செய்வதற்கு சதித்திட்டம்?

## தென்னிலங்கை ஊடகம் தகவல்

பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலகொடத்தே ஞானசாரதேரரை படுகொலை செய்யச் சதித் திட்டம் தீட்டப்பட்டது என தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டில் இயங்கி வரும் அடிப்படைவாத இயக்கமொன்றின் அடிப்படைவாத ஆயுததாரிகள் சிலர் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளனர் எனப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த ஆயுத குழுவில் சிலர் உள்ளடங்கியிருக்கின்றனர் எனவும் இவர்கள் மாலைதீவிலிருந்து நாட்டுக்குள் ஊடுருவியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தகவல்களை அடுத்து தனது பாதுகாப்பு குறித்துக் கூடுதல் கவனம் செலுத்துமாறு ஞானசார தேரருக்குப் புலனாய்வுப் பிரிவினர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

ஞானசார தேரர் தங்கியுள்ள விகாரைக்கு மீளவும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரரின் செயற்பாடுகள் ஒரு மதத் தரப்பின் வியாபகத்திற்குத் தடையாகக் காணப்படுவதால் இந்த கொலை சதி முயற்சி மேற்கொள்ளப்படுவதாகப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர் என தெற்கு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பொதுமக்களுக்கு விடுக்கும் அறிவுறுத்தல்

திருகோணமலை மாவட்டத்தில் கோவிட் தொற்றாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளமையால் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொதுமக்களுக்கான அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த றிவித்தலை கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட கோவிட் பரவல் அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1. சமய அனுஷ்டானங்களின் போது கலாசார திணைக்களத்தால் வழங்கப்பட்ட நடைமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடித்தல் வேண்டும்.

2. மே 31 அல்லது மறு அறிவித்தல் வரை தனியார் வகுப்புகள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவதை முற்று முழுதாகத் தவிர்த்தல் வேண்டும்.

3. இப்தார் நிகழ்வுகள், பொது நிகழ்வுகள் , களியாட்டங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களை முற்று முழுதாகத் தவிர்த்தல் வேண்டும்.

4. வீதியோரக் கடைகள் மற்றும் பண்டிகைக் கால விசேட கடைகளை சனநெரிசலற்ற இடத்தில் அமைத்தல் அல்லது அவற்றிலிருந்து விலகிக் கொள்ளல் வேண்டும்.

5. தேவையற்றதும் அநாவசியமானதுமான வெளிப் பயணங்களை முற்று முழுதாகத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

6. வர்த்தக நிலையங்கள் விசேடமாக பண்டிகைக்காகக் கடைகள் மற்றும் வீடுகளில் வர்த்தகம் செய்வோர் மற்றும் நுகர்வோர் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். இல்லாவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வர்த்தக நிலையங்கள் நீதிமன்ற அனுமதியுடன் பூட்டப்படும்.

7. வாராந்த சந்தைகள் மற்றும் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் நுகர்வோர் என அனைவரும் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ச்சியாகப் பேண வேண்டும்.

8. ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப பொது போக்குவரத்து பஸ்களில் பயணிகளை ஏற்றுதல் வேண்டும் எனவும் அந்த அறிவித்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை ஆரம்பித்து வைத்த தமிழ்த் தேசிய பயணம்

## தந்தை செல்வாவின் 44 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று



- பா.அரியநேத்திரன் -

தீர்க்கதரிசியான தந்தை செல்வா அவர்களின் 44 ஆவது ஆண்டு நினைவு இன்றாகும். 2021 ஏப்ரல் 26 - இன்று அவர் எமை விட்டு மறைந்து 44 ஆண்டுகளானாலும், அவர் விட்டுச்சென்ற தமிழ் தேசிய அரசியல் ஒரு நிரந்த தீர்வு கிடைக்காவிட்டாலும், அவரின் கொள்கை இன்றுவரையும் பேசும் பொருளாக தாயகம் கடந்து, தேசம் கடந்து, பிராந்தியம் கடந்து, சர்வதேச அரங்கில் கூர்மை பெற்றுள்ளது என்பதை எவராலும் மறுதலிக்க முடியாது.

தந்தை செல்வா அவர்கள் அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சி ஊடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்தாலும் அதில் இருந்து பதவி ஆசையால் விலகவில்லை. கொள்கை ரீதியாகவே அந்த கட்சியில் இருந்து விலகி, 1949 டிசம்பர் 18 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியை சமஷ்டிக்கொள்கையை முதன்மைப்படுத்தி இலங்கையின் தலைநகர் கொழும்பிலே வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களுடைய சுதந்திர வாழ்வுக்காக ஆரம்பித்தார்.

'வடக்கு, கிழக்கு தமிழ்ப் பேசும் மக்கள்' என இஸ்லாம் மக்களும் தமிழ் மக்களும் ஒன்றிணைத்து ஒரு சமஷ்டித் தீர்வை பெறவேண்டும் என்பதாலேயே தமிழ்ப் பேசும் மக்கள் என்ற ஒரே சொல்லில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் இணைத்து தமது அரசியல் பயணத்தைத் தொடர்ந்தார்.

வடகிழக்கில் இன்று எத்தனை தமிழ் அரசியல் கட்சிகளோ, எத்தனை முஸ்லிம் அரசியல்கட்சிகளோ அரசியல் பயணத்தையும் தேர்தல் அரசியலையும் ஜனநாயக அரசியல் போராட்டங்களையும் செய்வதென்றால் அதற்கு அடித்தளம் இட்ட ஒரே தலைவர் தந்தை செல்வா மட்டுமே.

வடகிழக்கில் உள்ள ஆரம்ப முஸ்லிம் அரசியல்வாதிகள் பலர் இலங்கை தமிழரசுக் கட்சி ஊடாகவே அரசியல் பயணத்தை ஆரம்பித்தனர். அதுபோலவே இன்று கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களைத் தடுத்து தமிழர் நிலம் பாதுகாக்கப்பட்டமைக்கான மூலகாரணம் தந்தை செல்வா என்பதை கிழக்கு வாழ் தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

தந்தை செலவா அவர்களுக்கு பதவி ஆசையோ அல்லது பிரதேச வாதமோ குறுகிய சிந்தனையோ இருந்திருந்தால் அவர் தமது அரசியலை வடமாகாணத்துடன் மட்டுப்படுத்தி இருப்பார். நல்லவேளை அப்படி அவர் வடமாகாணத்துடன் மட்டுப்படுத்தி இருந்தால் இன்று கிழக்கு மாகாணம் முழுவதும் - மட்டக்களப்பு மாவட்டம் அடங்கலாக - பெரும்பான்மை இனத்தவர்கள் குடியேறி தமிழை மறந்த தமிழர்களாக கிழக்கு மாகாணம் மாறி இருக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வழிகாட்டி இல்லாத அரசியல் தலைவர்களாக வெறும் அபிவிருத்தி அரசியலைச் செய்துவந்த மட்டக்களப்பு செல்லையா இராசதுரை, பட்டிருப்பு சீ.மூ. இராசமாணிக்கம் ஆகிய தலைவர்கள் திசைமாறிச் செல்லும் நிலை ஏற்பட்டு தமிழ்தேசியம் என்ற மந்திரம் மறைக்கப்பட்டு சிங்கள பெரும் தேசியத்தில் மட்டக்களப்பு மாவட்டம் சீரழிந்திருக்கும்.

நல்லவேளை தந்தை செல்வா நல்ல தலைவர்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் செல்லையா இராசதுரையையும் சீ.மூ.இராசமாணிக்கத்தையும் இனம்கண்டு இலங்கை தமிழரசு கட்சிக்குள் உள்வாங்கியமையால் மட்டக்களப்பில் தமிழ்தேசியம் நிலைத்தது. தமிழர் நிலம் காப்பாற்றப்பட்டது. திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர் தாயகத்தின் தலை நகராக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திருகோணமலையே இருக்க வேண்டும் என்பதை ஆணித்தரமாய் செயலில் நிரூபித்த ஒரு தலைவர் தந்தை செல்வாவே. அதனால் தான் இலங்கை தமிழரசு கட்சி ஆரம்பித்தபின் முதலாவது தேசிய மாநாட்டை கடந்த 1951 ஆம் ஆண்டு சித்திரை புதுவருட நாளான ஏப்ரல் 13, 14, 15, ஆகிய மூன்று தினங்களும் திருகோணமலையில் நடத்தி, ஈழத்தமிழர்களின் தலைநகர் திருகோணமலை என்பதை உறுதிசெய்தார். இரண்டாவது மாநாடுதான் 1953 ஜனவரி முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது.

மொத்தத்தில் வடக்கு கிழக்கு தமிழர்களுடைய மரபு வழி தாயகம். வடக்கும் கிழக்கும் இணைந்த சுயாட்சி தேவை என்பதை அவர் வலியுறுத்தினார். மாறி மாறி இலங்கையை ஆட்சி செய்த ஐக்கிய தேசிய கட்சி அரசு, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசு ஆகியவற்றின் தலைவர்களுடன் பேச்சுகள், ஒப்பந்தங்கள், அகிம்சைவழி போராட்டங்கள் என 1949 ஆம் ஆண்டு தொடக்கம் 1976 வரை மேற் கொண்ட போதும் சிங்கள பெரும்பான்மை ஆட்சி யாளர்கள் அவற்றைத் தட்டிக்கழித்தமையால் ஒன்றுமே செய்ய முடியாமல் தந்தை செல்வா தமது 78 வயதில் வட்டுக்கோட்டை தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மாறி மாறி ஆட்சி செய்த சிங்களத் தலைவர்கள் விட்ட தவறு காரணமாகவே தந்தை செல்வா வட்டுக்கோட்டை தீர்மானத்தை எடுத்தார்.

அந்த தீர்மானமானது ஈழத்தமிழர்களுக்காக ஈழத் தந்தை எனப்படும் செல்வநாயகம் தலைமையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒன்றிணைந்து வட்டுக்கோட்டை எனும் தொகுதியில் வழகம்பரை அம்மன் கோவில் அருகில் மிக பிரமாண்ட அரங்கில் பிரகடனம் செய்தனர்.

1. இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும்.

2. அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியல் இலக்கை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் தன்னாட்சி உரிமை வேண்டும்.

3. அதற்காக முழுமூச்சான பயணத்தை அஞ்சாத அர்ப்பணிப்புக்களோடு நாம் முன்னெடுக்கவேண்டும்.

- இந்தத் தீர்மானத்துடன் தந்தை செல்வாவின் அரசியல் பணி முற்றுப்பெற்றது.

இந்த தீர்மானத்தின் செயல்பாடு இளைஞர்களிடம் கைமாறியது. இதனால் 36 விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்று 1987 ஜூலை 29 ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு பின்னர் 36 விடுதலை இயக்கங்களில் 35 இயக்கங்கள் செயல் இழந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் 2009 மே 18 இல் மௌனமானது. இதனூடாக ஆயுதப் போராட்டமும் முற்றுபெற்றது.

தந்தை செல்வா வட்டுக்கோட்டை தீர்மானத்தை 1976 மே 14 இல் நிறைவேற்றிய பின் சரியாக பதினொரு மாதங்களில் 1977 ஏப்ரல் 26 இதே நாளில் இறையடி சேர்ந்தார்.

இதில் வேதனை என்னவென்றால் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கான வடக்கு, கிழக்கு மக்களின் அங்கீகாரத்துக்கான ஒரு தேர்தலாக 1977 ஜூன் 24 ஆம் திகதி பொதுத்தேர்தல் இடம்பெற்றது. இந்த தேர்தல் இடம்பெறும்போது தந்தை செல்வா உயிருடன் இல்லை. அவர் மரணித்து இரண்டு மாதம் கழித்துத் தேர்தல் இடம்பெற்றது. இந்தத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள மொத்தம் 19 தொகுதிகளில் 18 தொகுதிகளில் முழுமையாக தமிழர் விடுதலை கூட்டணி வெற்றிபெற்றது. வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு அங்கீகாரம் கிடைத்தது. மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா தொகுதி மட்டுமே தோல்வி ஏற்பட்டது.

இலங்கைச் சரித்திரத்தில் முதன் முதலாக ஒரு தமிழன் எதிர்க்கட்சி தலைவராகத் தெரிவான வரலாறும் இந்தத் தேர்தலிலேயே ஏற்பட்டது. ஆம், அப்பாப்பிள்ளைஅமிர்தலிங்கம்எதிர்க்கட்சிதலைவரானார்.

இன்று தந்தை செல்வா எம்மை விட்டு மறைந்து 44 ஆண்டுகள் கடந்தாலும் அவரால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தமிழரசு கட்சியும், அவர் தோற்றுவித்த சமஷ்டிக் கொள்கையும், அவர் உச்சரித்த தமிழ்தேசிய அரசியல் பயணமும் தொடர்ந்து செல்கின்றன.

தலைவர்கள் மாறலாம், தலைமைகள் மாறலாம், தமிழ்தேசிய அரசியல் பயணம் மாறாது. அது தொடரும்.

# அரசியலில் ஏமாற்றமடைந்துள்ளேன்? அமைச்சர் சுதர்ஷினி கவலையடைந்தார்



தாம் அரசியலில் ஏமாற்றமடைந்துள்ளார் எனவும், எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபடலாமா அல்லது வேண்டாமா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை தெரிவித்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினராக இருக்கின்ற போதிலும், கட்சியில் பல்வேறு பாகுபாடுகள் இருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் தாம் விரக்தியில் இருக்கிறார் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். எவ்வாறாயினும், கட்சி மாறும் எண்ணம் கிடையாது என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# மீகாவத்த பொலிஸ் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது

மீகாவத்த பொலிஸ் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த பொலிஸ் நிலையம் தற்காலிக அடிப்படையில் மூடப்பட்டுள்ளது.

இந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் 40 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீகாவத்த பொலிஸ் நிலையத்தின் பணிகள் தற்பொழுது மீகாவத்த நாகருக்காராம விகாரையில் தற்காலிக அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. அண்டைய பகுதிகளில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்தப் பணிகளை மேற்கொள்கின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் நேற்று காலமானார்



மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் செல்லத்தம்பு என அழைக்கப்படும் ஆசீர்வாதம் சந்தியோகு தனது 66 ஆவது வயதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

உடல் சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலே அவர் நேற்று காலமானார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாந்தை மேற்கு பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நிலையில், மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அலுவலர்கள், அரச கூட்டுத்தாபன ஊழியர்கள், அரச படையினர் மற்றும் பொலிஸ் சேவையில் இருந்தோர் சம்பந்தமான அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சபந்தமாக 2021 ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் நடைபெற்ற விவாதத்தின் போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் தமிழாக்கம் இது.

# ஜெனிவாவில் தமிழர்கள் கூறியவற்றையே ஆணைக்குழு மூலம் அரசு நிரூபிக்கிறது!

## அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் விக்னேஸ்வரன் உரை

மதிப்பு சார்ந்த பொதுச் சேவைக்குள் அரசியலானது புக இடமளித்த காலம் தொடக்கம் பதவியில் உள்ளோரின் பழிவாங்கல் குணம் பற்றியும் தம்மவர் நலம் பேணும் தன்மை பற்றியும் எதிர்த்தரப்பார் கூறுவதும் அதன்பின் எதிர்த் தரப்பார் பதவிக்கு வந்தவுடன் தம்முடைய ஆதரவாளர்கள் முன்னைய அரசால் பழிவாங்கப்பட்டார்கள் என்று கூறுவதும் சகஜமாகி விட்டது. ஆனால் பின்னர் பதவிக்கு வருபவர்கள் தாங்களும் பொதுச் சேவையில் இருக்கும் தமது ஆதரவாளர்களின் நலன்களைப் பேணும் வண்ணமே நடந்து கொள்வார்கள்.

இவ்வாறான நாசகரமான பழக்கமானது பொதுச் சேவைக்குள் அரசியல் ஊடுருவியதாலேயே ஏற்பட்டது.

நாடாளுமன்றமோ அரசியல்வாதிகளோ பொதுச் சேவையின் செயற்பாடுகளில் தலையிடக் கூடாது. அவ்வாறு செய்வது அரசியல் யாப்பின் 4ம் உறுப்புரையில் காணப்படும் 'அதிகாரப் பிரிவினை' **(Separation of Powers)** என்ற கோட்பாட்டை மீறுவதாக அமையும். நிறைவேற்றுத் துறையின் ஓர் அங்கமே பொதுச் சேவை. எனினும் அத்துறையின் மற்றைய அங்கத்தவர்களான ஜனாதிபதியும் அமைச்சரவையும் பொதுச் சேவை மீது வரையறுக்கப்பட்ட அதிகாரமே கொண்டுள்ளனர்.

எமது அரசியல் யாப்பானது நிறைவேற்றுத் துறை பற்றி மூன்று அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. அவையாவன VII, VIII, IX ஆவன. IXஆவது அத்தியாயமே பொதுச் சேவை பற்றி விவரிக்கின்றது. அமைச்சரவைக்கு பொதுச் சேவை மேல் இருக்கும் ஒரேயொரு அதிகாரமானது கொள்கை பாற்பட்டதே. அரசியல் யாப்பின் உறுப்புரை 55(4) பின்வருமாறு கூறுகின்றது –

'அரசியல் யாப்பின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவையானது கொள்கை பாற்பட்ட சகல விடயங்களையும் அவை பற்றிய தீர்மானங்களையும் பொது அலுவலர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.'

அரசியல் யாப்பானது காரணத்துடன்தான் ஜனாதிபதியையோ அமைச்சரவையையோ பொதுச் சேவையின் செயற்பாடுகளில் ஊடுருவ இடமளிக்காது விட்டுள்ளது. அமைச்சரவை கொள்கையளவிலான அறிவுரைகளை வழங்கலாம். உதாரணமாக யார் யாருக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பத்திரம் பதிய வேண்டும் என்பதை அமைச்சரவை தீர்மானிக்க முடியாது. அதற்கான உரித்து சட்டத்துறைத் தலைமையதிபதியை மட்டுமே சாரும்.

இதற்காகத்தானோ என்னவோ ஜனாதிபதி அவர்கள் வேறு பல நிறுவனங்களை உள்ளேற்றாலும் சட்டத்துறைத் தலைமை அதிபதியை மேற்படி ஆணைக்குழுவுடன் சேர்க்கவில்லை. ஆணைக்குழு தான்தோன்றித்தனமாக வழக்குத் தொடுப்பவர்களையும் வருத்தத் தொடங்கியிருப்பது வியப்பைத் தருகின்றது.

அமைச்சரவையானது தனது நடவடிக்கைகள் சம்பந்தமாக நாடாளுமன்றத்திற்கே பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. அமைச்சரவை கொள்கை ரீதியான நெறிப்படுத்தலை மட்டுமே பொதுச் சேவைக்கு அளிக்க முடியும் என்று இருக்கும் போது நாடாளுமன்றம் எதனை மேலதிகமாக பொதுச் சேவை சம்பந்தமாகச் செய்ய முடியும்? நாடாளுமன்றம் அமைச்சரவையின் கொள்கைகள் பற்றி மட்டுமே கேள்விகள் எழுப்பலாம். ஆனால் நாடாளுமன்றம் அரசியல் பழிவாங்கலைக் கட்டுப்படுத்த தகுந்த சட்டங்களை நிறைவேற்ற முடியும்.

ஆனால் நாடாளுமன்றம் தனிப்பட்டவர்கள் சம்பந்தமாக பொதுச் சேவையினரை நெறிப்படுத்த முடியாது. அப்படிச் செய்தால் அத்தகைய செயல் அரசியல் யாப்பின் உறுப்புரைகள் 4 மற்றும் 55 ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைந்து விடும்.

நான் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த போது சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க பல வழக்குகளில் என்முன் தெரிபட்டுள்ளார். அவர் நேற்று, பஸில் ராஜபக்ஷ போன்றவர்களுடன் சேர்ந்த அவரின் கட்சிக்காரர்களுக்கு சென்ற அரசாங்கம் காலத்தில் என்ன நடந்தது என்பது பற்றி நடிப்பது போலவும் விலாவாரியாகவும் பலதையும் எடுத்துக் கூறினார்.

ஆனால் தனிப்பட்டவர்களோ அவர்களின் சட்டத்தரணிகளோ சாட்சியங்கள் அவர்களுக்கெதிராகப் புனையப்பட்டுள்ளன என்றோ அல்லது அரசியல் ரீதியாகப் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றோ கண்டால் நீதித்துறையூடாக உரிய நிவாரணங்கள் பெற பல வழிகள் உண்டு. முதலாவதாக அதே வழக்கில் அம்மன்றத்தில் ஆட்சேபணைகளைத் தெரிவித்துக் கொள்ளலாம். இரண்டாவதாக அரசியல் யாப்பின் உறுப்புரை 126 இன் கீழ் தமது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கூறி உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். மேலும் உறுப்புரை 140 இன் படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தடையாணைகள் எவற்றையேனும் பெற்றுக் கொள்ளலாம். அது மட்டுமல்ல. குரோத எண்ணமுடன் பொய் வழக்குப் பதியப்பட்டது என்று வழக்குப் பதிந்து நட்ட ஈடு பெற்றுக் கொள்ளலாம்.

நீதித்துறையின் கீழான நியாயாதிக்க எல்லைகள் பரந்து கிடக்கின்றபடியால் அநியாயம் நடப்பதைத் தடை செய்து நட்ட ஈடும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே தனிநபர்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்க நிறைவேற்றுத் துறைக்கோ சட்டவாக்கத் துறைக்கோ எந்த அதிகாரமும் இல்லை. தனிநபர்கள் தமது குறைகளைத் தீர்க்க நீதித்துறையையே நாட வேண்டும்.

முன்னைய அரசாங்கம் ஒன்றினால் நடாத்தப்பட்ட அரசியல் பழிவாங்கல்களுக்கு விசேட ஆணைக் குழுக்களையும் குழுக்களையும் நாடலாம் என்று கருதுவது சட்டவாட்சிக் கொள்கைக்கு (Rule of Law) முரணானது. உறுப்புரை 126 இன் கீழ் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமில்லை. அரசியல் யாப்பின் உறுப்புரை 126(1) பின்வருமாறு கூறுகின்றது. 'அத்தியாயம் III அல்லது அத்தியாயம் IVன் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை நிறைவேற்றுத் துறையின் நிர்வாக நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டால் அல்லது பாதிக்கப்படும் ஆபத்தில் இருந்தால் அவற்றை ஆராய்ந்தறியும் பிரத்தியேகமானதும் தனிப்பட்டதுமான அதிகாரம் உச்ச நீதிமன்றத்தையே சாரும்'.

ஆகவே மேற்படி பொதுச் சேவை அலுவலர்கள், அரசகூட்டுத்தாபன ஊழியர்கள், அரச படையினர் மற்றும் பொலிஸ் சேவையில் இருந்தோர் சம்பந்தமான அரசியல் பழிவாங்கல்களை ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்திற்குப் புறம்பானது என்பதே எனது கருத்து. பொதுச் சேவை தனது கடமைகளைப் பக்கச் சார்பின்றி ஆற்ற இடமளிக்க வேண்டும். அவர்கள் பதவியுள்ளோரின் மனங்களைக் கவர தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர்.

நேற்றைய தினம் கௌரவ சரத் பொன்சேகா அவர்களால் 'பிஸ்சு பூசா' (விசர் பூனை) ஆணைக்குழு என்று அழைக்கப்பட்ட இந்த ஆணைக்குழு சட்டத்திற்குப் புறம்பாக நியமிக்கப்பட்டதெனின் அவ்வாறான ஆணைக்குழு அறிவுள்ளோர் காலடி எடுத்து வைக்க விரும்பாத இடங்களுக்குள் எல்லாம் மகிழ்வுடன் காலடி எடுத்து வைத்துள்ளது.

ஆணைக்குழுவால் ஆராயப்பட்ட பல வழக்குகள் முடிவுறாமல் இன்றும் நடப்பில் இருந்து வருகின்றன. ஆணைக்குழுவானது அரசியல் யாப்பின் உறுப்புரை 105 இனால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஓர் அமைப்பல்ல. அதாவது நீதி நிர்வாகத்திற்காகச் சட்டப்படி நியமிக்கப்பட்ட ஒரு நிறுவனம் அல்ல. ஆகவே நீதித் துறைக்கு ஏற்புடைத்தான விடயங்களுக்கு எதிர்மாறாக இயற்றப்பட்ட ஓர் அமைப்பே அது.

முடிவுறாமல் நீதிமன்றங்களில் இருக்கும் வழக்குகள் சம்பந்தமாக ஆணைக்குழு எடுக்கும் சகல நடவடிக்கைகளும் நீதித்துறையின் செயற்பாடுகளில் ஊடுருவல் செய்யும் நடவடிக்கைகளாகவே கருதப்படுவன. அவ்வாறான ஊடுருவல் அரசியல் யாப்பின் உறுப்புரை IIIC என்பதின் ஏற்பாடுகளுக்கு முரணானவை. அவ்வுறுப்புரையின்படி நீதித்துறையின் நடவடிக்கைகளுள் ஊடுருவல் செய்யும் விதத்தில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அது அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின்படி ஒரு தண்டிக்கப்பட வேண்டிய குற்றச் செயலாகும். இந்த விவாத முடிவில் மேற்படி ஆணைக்குழுவின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானம் எடுத்தால் இந்த உயரிய நாடாளுமன்றமும் உறுப்புரை IIICன் கீழ் குற்றம் இழைத்ததாகவே கருதப்படும். அதனால்தான் போலும் இந்த விவாதம் பற்றிய பிரேரணையில் தவறுகள் இருந்தாலும் விவாதத்தை அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படவில்லை.

இதனால்தான் இவ்வாணைக்குழுவை உருவாக்கிய 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானி இலக்கம் 2157/44 இல் (இறுதிப் பந்திக்கு முந்திய பந்தியில்) மேற்படி ஆணைக் குழுவால் அதன் குறிக்கோள்கள் சம்பந்தமாக எடுக்கப் போகும் நடவடிக்கைகள் ஏற்கனவே நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கோ எடுக்கப்படப் போகும் நடவடிக்கைகளுக்கோ பாதிப்பில்லாமல் அவற்றிற்கு அப்பால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆவன என்று கூறப்பட்டுள்ளது. 'பாதிப்பில்லாமல்' என்று கூறும் போது ஆணைக்குழுவின் புதிய நடவடிக்கைகள் தற்போது நடைமுறையில் இருந்து வரும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பாதிக்க மாட்டா என்று அர்த்தப்படும். அப்படியானால் நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட பல தீர்மானங்களைப் புறந்தள்ளும் விதத்தில் ஆணைக்குழு செயற்பட்டதன் அர்த்தம் என்ன? ஆணைக்குழு தான் எடுத்திருக்கும் நடவடிக்கைகளின் தாற்பரியத்தை அறியாது இருப்பது விந்தையேயாகும்.



இவ்வளவும் கூறிய பின், இன்னொரு கோணத்தில் இருந்தும் இதைப் பார்க்கின்றேன். தற்போது இந்த நாட்டில் நடக்கும் செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கும், சட்டவாட்சிக்கும், பொதுச் சேவையினதும் நீதித்துறையினதும் சுதந்திர செயற்பாடுகளுக்கும் சாவு மணி அடிப்பது போல் இருந்தாலும் மாறி மாறி வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்களினால் பாதிப்புற்று இதுவரையில் நீதி பெறாமல் இருக்கும் தமிழ் மக்களுக்கு இந்த ஆணைக்குழுவின் நியமனமும் அதன் செயற்பாடுகளும் அதன் அறிக்கை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதும் ஒரு முரணான சிந்திப்பின் அடிப்படையில் வரவேற்கத் தக்கதாகும். அதாவது வரவேற்பதன் அர்த்தம் என்னவென்றால் ஜெனிவாவில் தமிழர் சார்பான தரப்பினரால் கூறிய அதே விடயங்கள் இந்த நடவடிக்கைகளால் ருசுப்படுத்தப்பட்டுள்ளன.

நீதியின் பயணத்தை இலங்கை அரசாங்கம் எவ்வாறு தவறான வழியில் திசை திருப்புகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம் ஆகும். தமிழர்கள் இதுகாறும் கூறி வந்தனவற்றிற்கு இந்த நடவடிக்கைகள் ஓர் உதாரணம் போல் அமைந்துள்ளது. நாம் என்ன கூறினோம்? நீதியானது தனது தூய பாதையில் பயணஞ் செய்ய இலங்கை அரசாங்கம் இடமளிக்கும் என்று எஞ்ஞான்றும் நாம் நம்ப முடியாது என்றோம். இதனால்தான் தமிழர்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகியன ஒரு சர்வதேச நியாமன்றை உருவாக்குங்கள் என்று கேட்டிருக்கின்றார்கள்.

ஊழல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நபர்கள் மீது விசாரணை நடத்த விடாமல் தடுக்கும் அரசாங்கம் போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்கும் என்று எவ்வாறு நம்பலாம்? இலங்கைக்கெதிராக செயற்படுகின்றார்கள் என்று எமது புலம்பெயர் உறவுகளையும், அரச சார்பற்ற அமைப்புக்களையும் மேற்குலகையும் கண்டிக்கும் அரச தரப்பில் இருக்கும் நீங்கள் தற்போது நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதைக் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

உங்களுடைய கையாள்களையும் அடிவருடிகளையும் காப்பாற்ற நீங்கள் எடுத்திருக்கும் கேள்விக்கிடமான இந்த நடவடிக்கைகள் அல்லவா இலங்கையை அதள பாதாளத்திற்குள் தள்ளுகின்றது?

சிந்தித்துப் பாருங்கள்!

எவராவது ஒருவர் இந்த நாட்டை நாங்கள் மட்டுமே நேசிக்கின்றோம் என்று கூறும் தகுதி பெற்றவர் அல்லர். இந்த நாட்டின் பெரும்பான்மையினர் மனிதாபிமான முறையிலும், புத்திசாதுரியத்துடனும் மற்றும் தூர நோக்குடனும் நடந்திருந்தால் தற்போதைய இந்த இடர் நிலை இந்த நாட்டைப் பாதித்திருக்காது. எமது இளைஞர்கள் துப்பாக்கிகள் தூக்கியிருக்க மாட்டார்கள். நாங்கள் இனியாவது எமது பாதையை மாற்றி நிதானம் நோக்கியும் ஐக்கியம் நோக்கியும் செழுமை மிக்க எதிர்காலம் நோக்கியும் பயணிப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# துறைமுக நகர சட்ட மூலம் தொடர்பாக மகாசங்கத்தினருக்கு கோட்டா விளக்கம்



கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மகா சங்கத்தினருக்குத் தெளிவு படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் கூடிய பௌத்த ஆலோசனை சபை கூட்டத்தில் ஜனாதிபதி இது தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

நில அளவை விரிவுபடுத்தி புதிய முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் ஒரு நாடு என்ற வகையில் பெற்றுக்கொள்ளும் பாரிய வெற்றியாகும்.

தவறான கருத்துக்களைப் பரப்பி அனைத்தையும் எதிர்ப்பதற்கு பதிலாக ஒரு தேசமாக முன்னேறுவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும். இந்த அபிவிருத்தித்திட்டம் தொடர்பாக மக்களுக்கு சரியான தெளிவை வழங்கி, அதற்கான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேரர்கள் இதன் போது சுட்டிக் காட்டினர்.

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இந்தத்திட்டம் தொடர்பாக விரிவாகத் தெளிவுபடுத்தியமையுடன் பொருளாதாரத்துக்கும் நாட்டுக்கும் கிடைக்கும் பயன்கள் பற்றியும் கருத்து தெரிவித்தார்.

அத்தோடு இதன் போது கொவிட் 19 புதிய உருமாற்றம், சுகாதார துறையின் ஆலோசனைகள் தொடர்பாக ஜனாதிபதி மகாசங்கத்தினருக்குத் தெளிவுபடுத்தினார்.

## இலங்கையில் கையிருப்பில் உள்ள தடுப்பூசிகள் ஜூன், ஜூலை மாதங்களில் காலாவதியாகின்றன

இரண்டாவது டோஸை வழங்குவதற்கான ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் குறைந்த அளவிலான பங்குகளை எவ்வாறு நிர்வகிப்பது என்பது தொடர்பாக அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை.

குறித்த தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்ற கிட்டத்தட்ட அரை மில்லியன் இலங்கையர்களில் 3 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு செலுத்தக்கூடிய பங்குகள் மட்டுமே தற்போது கையிருப்பில் காணப்படுகின்றன.

அரசாங்க புள்ளிவிவரங்களின்படி, தற்போது வரை மொத்தம் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் குறித்த தடுப்பூசியின் 3 லட்சத்து 56 ஆயிரம் அளவுகள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் இந்த பங்குகளில் 91 ஆயிரம் தடுப்பூசிகள் ஜூன் 24 ஆம் திகதியும், 2 லட்சம் 65 ஆயிரம் தடுப்பூசிகள் ஜூலை 16 ஆம் திகதியும் காலாவதியாகவுள்ளன.

இந்நிலையில் கிடைக்கக்கூடிய தடுப்பூசிகள் அவற்றின் காலாவதிக்கு முன்பே செலுத்தப்படும் என்றும் அடுத்த மூன்று மாதங்களுக்குள் இரண்டாவது டோஸுக்குத் தேவையான மீதமுள்ள பங்குகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கொவிட் தடுப்பூசி கொள்முதல் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை தயாரிக்கும் பிற நாடுகளுடன் அரசாங்கம் கலந்துரையாடி வருவதாகவும் வீரதுங்க மேலும் கூறினார்.

## கொரோனா காரணமாக இரு வெளிநாட்டவர் பலி

கொவிட் வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் உயிரிழந்துள்ளனர் என அரச தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பு 2 பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதான வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார். கண்டி தேசிய வைத்தியசாலையில் இவர் உயிரிழந்துள்ளார் எனவும், மாரடைப்பு மற்றும் கொவிட் நிமோனியாவால் இவர் உயிரிழந்துள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 4 பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதான வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார். கொழும்பு கொவிட் சிகிச்சை நிலையத்தில் இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சிறுநீரக நோய், உடல் உறுப்புக்கள் செயலிழந்தமை மற்றும் கொவிட் நிமோனியா காரணமாக இவர் உயிரிழந்துள்ளார்.

## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு பிரதேசத்தில் தூக்கிட்டு கொண்ட நிலையில் சனிக்கிழமை காலை முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோட்டைக்கல்லாறு பிரதான வீதியை சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கிருபைராஜா என்ற 62 வயது நபர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வீட்டின் மேல்மாடிக் கூரைக்கு அமைக்கப்பட்ட இரும்பு கம்பியில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. மேலதிக விசாரணைகளைக் களுவாஞ்சிகுடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## தோட்டத் தொழிலாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும் என்கிறார் வடிவேல் சுரேஷ்



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

நாளாந்த சம்பளமாக 1000 ரூபா வழங்கப்படுகிறது என்பதற்காக வழமையை மாற்றி மேலதிக கொடுப்பனவை வழங்காமல் இருக்க முடியாது.

கொவிட் தொற்று மீண்டும் அதிகரித்துள்ள நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே தொழிலுக்குச் செல்கின்றனர்.

எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

அச்சத்தின் மத்தியிலேயே அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதே போன்று பாடசாலைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும்.

மலையக பல்கலைக்கழகம் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

கொவிட் கட்டுப்படுத்தலுக்காக பெருந்தோட்டங்களில் எந்தவொரு முறையான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. நாடாளுமன்றத்திற்குள் நுழையும் போது பாதுகாப்புடன் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. - என்றார்.

## சுகாதார விதிமுறை மீறிய 19 பேர் கைது

முகக் கவசம் அணியாமை மற்றும் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக கடந்த சனிக்கிழமை 19 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கிரிபத்கொட மற்றும் பிலியந்தலை பகுதிகளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


குறித்த நடவடிக்கைக்காக கடந்த ஒக்ரோபர் 31 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 3 ஆயிரத்து 470 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

## வீதி விபத்துக்களில் மேலும் எண்மர் பலி

நாட்டில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் வீதி விபத்துக்களால் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் ஆறு பேர் கடந்த சனிக்கிழமை நடந்த விபத்துக்களில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர். ஏனைய இருவர் அதற்கு முன்னர் நடந்த விபத்துக்களில் சிக்கியவர்கள், காயமடைந்தவர்கள் என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

மோட்டார் சைக்கிள் சாரதிகள் ஐவர், பாதசாரியொருவர், ஒட்டோ பயணியொருவர் மற்றும் லொறியொன்றின் உதவியாளர் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஆவர்.




## தினம் ஒரு விவசாயத் தகவல்

### தக்காளி நாற்றுமேடை பராமரிப்பு



மார்ச் நடுப்பகுதியில் அல்லது ஒகஸ்ட் நடுப்பகுதியில் நாற்றுமேடையில் நடலாம். விதைகளை நடமுன் அவற்றைத் தொற்று நீக்கம் செய்ய வேண்டும். இதற்கு கப்ரான் அல்லது திராம் போன்ற பங்கசு நாசினிகளைப் பயன்படுத்தலாம். 125 கிராம் விதைக்கு 2 கிராம் பங்கசுநாசினி போதுமானதாகும்.

நாற்றுமேடையில் விதைகளை வரிசைகளுக்கிடையே 12 - 15 சத மீற்றர் இடை வெளியில் நடுகை செய்யலாம்.

விதைகளை 0.5 - 1 ச.மீ அழத்தில் நட்டு தூர்வையான மண் படையால் மூடவும். இதன்பின் இப் பாத்தியை சுத்தமான வைக்கோல் படையால் மூடவும்.

அதிக சூரிய வெப்பம், கடும் மழை என்பனவற்றிலிருந்து நாற்றுக்களைப் பாதுகாக்க பாத்தியின் மேல் கூடாரமொன்றை அமைக்கவும். 7நாள்களின் பின் பத்திரக் கலவையாக இட்ட வைக்கோலை அகற்றவும். 8 - 10 நாள்களின் பின் நாற்றுக்களைக் கையால் பிடுங்கவும்.

நாற்றுமேடையிலிருந்து நாற்றுக்களை பிடுங்குவதற்கு சில நாள்களுக்கு முன்னர் அவற்றை வன்மைப்படுத்த வேண்டும். இதற்கு நீரைக் குறைவாக ஊற்றுவதோடுஇ நாற்றுகள் மீது சூரிய ஒளியையும் படச் செய்ய வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்நிகர் வகுப்பறை 17

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - (தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

## Online Classroom



"பிக் ப்ளூபட்டன் மென்பொருள் 2007 ஆம் ஆண்டில் கனடாவின் ஒட்டாவாவில் உள்ள கார்லேடன் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மேலாண்மை திட்டத்தால் உருவாக்கப்பட்டது. இது இன்று 65 மொழிகளில் கிடைக்கிறது. மற்றும் உலகம் முழுவதும் உள்ள ஆசிரியர்கள் அதன் வடிவமைப்பிற்கு பங்களித்துள்ளனர். இது இன்று வணிக நோக்கம் கொண்ட ஸூம் போன்ற செயலிகளுடன் போட்டி போடுவதற்காக தொடர்ந்து மேம்படுத் தப்பட்டு வருகிறது. அதாவது ஆசிரியர்களின் புதிய நிஜ உலக தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்ந்து உருவாகி வருகிறது.

தற்போது கொவிட் தாக்கத்தின் இரண்டாம் அலை பாரியவிளைவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இதனால் மீண்டும் நேரடிக் கல்வி நிறுத்தப்பட்டு மெய்நிகர் கல்விக்கு முற்றுமுழுதாக மாறி வேண்டிய நிலையுள்ளது. தொழில்நுட்ப வசதியூடாக மெய்நிகர் கல்வி வாழ்க்கையில் தனது முக்கியத்துவத்தினை நிரூபித்து வருகிறது. மெய்நிகர் கற்பித்தலின் முற்றுமுழுதான அறிவைப்பெற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள் அனைவரும் தள்ளப்படுகிறோம். கற்போரையும் கற்பிப்பவரையும் இணைக்க பல வழிவகைகளை தொழில்நுட்பம் எமக்குத் தந்து கொண்டிருக்கிறது.

கவனச்சிதறல் நிறைந்த இந்த யுகத்தில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் தேவைகளுக்கு பொருத்தமான மெய்நிகர் அமைப்பு மிகக் குறைவாகக் காணப்படுவதை உணரலாம். நாம் ஸூம் பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் இது வரை பார்த்துள்ளோம். ஆசிரியர்களுக்காகவும் மாணவர்களுக்காகவும் சிறப்பாக தயாரிக்கபபட்ட ஒரு மெய்நிகர் வகுப்பறையை இன்று நாம் பாரக்கலாம்.

இலங்கையில் பாடசாலைகள், கல்வியியல் கல்லூரி, ஆசிரியர்கலாசாலை போன்றவற்றின் கல்விச் செயற்பாட்டினை ஒருங்கிணைக்கின்ற கற்றல் மேலாண்மை அமைப்பை கல்வியமைச்சு உருவாக்கியிருக்கின்றது. இதற்காக ஈ.தக்சலா செயல் திட்டத்தில் இவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தத்திட்டத்திற்கு **Big Blue Button** (பிக் ப்ளூ பட்டன்) கற்பித்தல் தளம் பயன்படுத்தப்டுகின்றது. இது இலகுவானதும் செலவு குறைந்ததாகவும் மாணவர்கள் இலகுவில் அணுகக்கூடியதாகவும் உணரப்படுகின்றது. இருப்பினும் வணிக நிறுவனங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்ட ஸூம் போன்ற செயலிகளில் காணப்படும் கவர்ச்சிகரமான விரைவுத்தன்மை இதில் இல்லை என்ற குறைபாடும் உண்டு.

### Big Blue Button (பிக் ப்ளூபட்டன்)

பிக் ப்ளூபட்டன் ஓர் உலகளாவிய கற்பித்தல் தளமாகும். இது பாடசாலையிலிருந்து உருவாக்கப்பட்டது. ஆசிரியர்களுக்காகவே, உருவாக்கப்பட்ட ஒரே மெய்நிகர் வகுப்பறையாகும். தற்போது மெய்நிகர் வகுப்பறைக்காக பயன்படுத்தப்படும் அதிகமான மென்பொருள்கள் வணிக நோக்கத்திற்காகவே உருவாக்கப்பட்டவை. வணிக நிறுவனங்களின் ஆளணியை மேம்படுத்துவது மற்றும் விருத்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டவையாகும். கற்பித்தலுக்காக ஒரு சில மென் பொருள்களே உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் பிக் ப்ளூபட்டன் முன்னோடியானது.

பிக் ப்ளூபட்டன் மென்பொருள் 2007 ஆம் ஆண்டில் கனடாவின் ஒட்டாவாவில் உள்ள கார்லேடன் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மேலாண்மை திட்டத்தால் உருவாக்கப்பட்டது. இது இன்று 65 மொழிகளில் கிடைக்கிறது. மற்றும் உலகம் முழுவதும் உள்ள ஆசிரியர்கள் அதன் வடிவமைப்பிற்கு பங்களித்துள்ளனர். இது இன்று வணிக நோக்கம் கொண்ட ஸூம் போன்ற செயலிகளுடன் போட்டி போடுவதற்காக தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது ஆசிரியர்களின் புதிய நிஜ உலக தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்ந்து உருவாகி வருகிறது. இதனால் பின்னடைவுகளையும் சந்தித்து வருகிறது. ஆனால் கல்வியாளர்கள் பிக் ப்ளூபட்டனில் காணப்படும் அம்சங்களை பாராட்டுகிறார்கள், இதில் ஆசிரியர்கள் மாண வர்களை பாடத்தில் கவனம் செலுத்துவதை எளிதாக்கும் கருவிகள் அடங்கும். திரை பகிர்வு, பல பயனர்களின் வையிட் போர்ட், பிரேக்அவுட் அறைகள், எளிதான குழு வாக்குப்பதிவு மற்றும் மாணவர்களை ஈடுபட வைப்பது போன்ற அம்சங்களால் இது கல்வியானர்களால் வரவேற்கப்படுகிறது.

இதன் விளைவாக, பிக் ப்ளூபட்டன் உலகளவில் பயன்படுத்தப்படும் முக்கிய கற்றல் மேலாண்மை அமைப்புகளில் ஆழமாக உட்பொதிக்கப்பட்டுள்ளது. **Canvas, Moodle Cloud, Sakai, Jenzabar, D2L, Schoology** ஆகியவற்றால் இயல்புநிலையில் மெய்நிகர் வகுப்பறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தத்தில், மேலேகுறிப்பிட்டுள்ள மென்பொருள்கள் கற்றல் முகாமைத்துவ அமைப்புகளுக்கான (எல்.எம்.எஸ்.) உலகளாவிய சந்தையில் 75 வீதத்திற்கும் அதிகமான வணிகத்தை கட்டு படுத்து கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பிக் ப்ளூபட்டன் ஐ ஒன்லைன் கற்றலுக்காக எல்லோரும் பயன்படுத்தக்கூடிய ஒரு திறந்த உரிமத்தின் கீழ் இலவசமாக அணுகலாம். வணிக வலை மாநாட்டு அமைப்பிலிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் முக்கிய அம்சங்களை இங்கும் பெறலாம். ஆனால் அவற்றைமுழுமையாகஇலவசமாகப்பெற்றுக்கொள்ளலாம். வணிக வலை மாநாட்டு அம்சங்களான ஓடியோ, வீடியோ, விளக்கக்காட்சி மற்றும் திரையின் நிகழ்நேர பகிர்வு ஆகியவை அடங்கும் – வையிட் போர்ட், பகிரப்பட்ட குறிப்புகள், வாக்குப்பதிவு மற்றும் பிரேக்அவுட் அறைகள் போன்ற ஒத்துழைப்பு கருவிகளுடன் பிக் ப்ளூபட்டன் கற்பிப்பதற்கு உதவுகிறது.

பிக் ப்ளூபட்டன் ஆசிரியர் – மாணவர் கற்றலை இலகுபடுத்துகிறது. எடுத்துக்காட்டாக, கடினமான கணிதச் சிக்கலைத் தீர்க்க ஒரு மாணவருக்கு உதவ ஓர் ஆசிரியர் பிக் ப்ளூபட்டனின் பல வையிட் போர்டைப் பயன்படுத்தலாம்.

வணிக மென்பொருள்கள் போலல்லாமல் பிக் ப்ளூபட்டன் வலை உலாவியில் இயங்குகிறது. நீங்கள் ஓர் இணைப்பைக் கிளிக் செய்து (கிரீன்லைட் போன்றவை), பிக் ப்ளூபட்டினில் இணையலாம். இதனை பதிவிறக்கம் செய்யத் தேவை இல்லை, நிறுவன மென்பொருள் இல்லை. வலை நிகழ்நேர தகவல் தொடர்பு நூலகங்களுக்கான உலாவியின் உள்ளமைக்கப்பட்ட ஆதரவைப் பயன்படுத்தி பிக் ப்ளூபட்டன் உயர்தர ஓடியோ, வீடியோ மற்றும் திரைப் பகிர்வை வழங்குகிறது.

மைக்ரோசொவ்ட் சமீபத்தில் (ஜனவரி 2020) மைக்ரோசொவ்ட் எட்ஜின் புதிய பதிப்பை வெளியிட்டது, இது கூகிள் குரோம் – ஐ இயக்கும் திறந்த மூல இயந்திரத்தை பயன்படுத்த தொடங்கியது. இதன் பயனாக விரைவில் நூற்றுக்கணக்கான மில்லியன் விண்டோஸ் 10 கணினிகள் ஒரே கிளிக்கில் பிக் ப்ளூபட்டனை இயக்க முடியும்.

சிமாட் தொலைபேசியில் இதனை பதிவிறக்க அல்லது நிறுவ தேவையில்லை 'அது மொபைல் உலாவியில் இயங்குகிறது. இதனால் இது பிக் ப்ளூபட்டன் அமர்வில் சேர, முதலில் உலாவியில் உள்ள ஓர் இணைப்பைக் கிளிக் செய்துவது அல்லது மொபைல் பயன்பாட்டை (**Moodle Mobile** போன்றவை) கிளிக் செய்வது, என்பது நடைபெறுகிறது. பிக்ப்ளூபட்டன் சஃபாரி மொபைல் (**IOS**) அல்லது **Google Chrome (Android)**க்கும் இது இயங்கும்.

ஆசிரியர் கலாசாலையில் இந்த மென்பொருளைப் பயன்படுத்தும் மாணவர்கள், ஆசிரியர்களிடம் இதன்பயன்பாடு பற்றி அறியமுற்பட்டோம். இது செலவு குறைந்தது என்பதையும் வணிக நோக்கமற்றது என்பதையும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதே வேளை இதனைப்பயன்படுத்தும் மாணவர்கள் ஏனைய வணிகசெயலிகளுக்கு தொலைத்தொடர்பு நிறுவனங்கள் சிறப்பு சலுகைக்கட்டணங்களை வழங்குவது போன்று இதற்கு வழங்காததால் தாம் பாதிக்கப்படுவதாக குறிப்பிடுகிறார்கள். அதே வேளை இந்த செயலியை தரவிறக்கம் செய்து மொபைல் போனில் பயன்படுத்தாது நேரடியாக இணைய உலவிகளின் மூலம் பயன்படுத்துவதால் தடைகள் ஏற்படுவதாகவும் சில சேவைகளைப் பெறமுடியாதுள்ளது எனவும் குறிப்பிடுகிறார்கள்.

பொதுவாக இது வேகமாக வளர்ந்து வரும் மெய்நிகர் வகுப்பறைகளோடு ஒப்பிடும் போது மாட்டுவண்டிச் சவாரி போன்றுள்ளது என்பது ஆசிரியர் கலாசாலை மாணவர்களின் கருத்தாக உள்ளது.

**தொடரும்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய கொரோனா பேராபத்து! மக்களே மிகவும் அவதானம்!!



## எச்சரிக்கை விடுத்தது அரசு

**இலங்கையில் தற்போது பரவும் புதிய கொரோனா வைரஸ் பேராபத்து மிக்கது எனவும், மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

விசேடமாக இந்தியாவின் நிலைமையைக் கருத்தில்கொண்டு அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் கொரோனாவின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் புதிய வகை கொரோனா வைரஸ், முன்னரைவிடவும் தீவிரமாகப் பரவும்தன்மைகொண்டது. இந்த வைரஸ், தொற்று ஏற்பட்டு அறிகுறிகள் தோன்றும்போது நோயாளியின் நுரையீரலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது.

பிரிட்டனில் பரவி வரும் கொரோனா வைரஸை ஒத்த வைரஸே இலங்கையிலும் பரவுகின்றது எனத் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளிலிருந்து அறியமுடிகின்றது.

எனினும், உத்தியோகபூர்வ முடிவுகளை வெளியிட சில தினங்கள் ஆகலாம்.

எனினும், பொது மக்கள் அதுவரை, காத்திருக்காது சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

# மே தினம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுப்பதற்கு அரசு பிரயத்தனம்

## ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் குற்றச்சாட்டு



மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாங்கள் எந்தத் தடை வந்தாலும் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும்எமதுமேதினத்தைஅனுஷ்டிப்போம் என உறுதி பூண்டுள்ளோம்.

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின்யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறைமேதினத்தைகொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். எனினும், இந்த அரசானது எமது மே தின நிகழ்வுகளைத் தடை செய்வதற்குப் பல்வேறு விதத்திலும் முயன்று வருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாங்கள் எந்தத் தடை வந்தாலும் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் எமது மே தினத்தை நினைவு கூருவோம் என உறுதி பூண்டுள்ளோம்.

மே மாதம் என்பது ஒரு விசேட மாதமாகும். மே தின நிகழ்வு மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் மாதமாகும்.

எனினும், இந்த அரசானது தற்போது கொரோனா என்ற ஒரு மாயையை உருவாக்கி மே தின நிகழ்வு மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைத் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்கள் வேறு நாட்டு மக்கள் இல்லை. எதிரி நாட்டுப் பிள்ளைகள் இல்லை. எங்களது உறவுகள் எங்களது சகோதரர்கள். அதனால் அந்தச் சகோதரர்களை நினைவுகூர்வதற்கு அந்த மக்களுக்கு உரிமைஇருக்கின்றது. அந்த உரிமையை அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. இதற்கு எங்களுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்கள் எதற்காகப் போராடினார்கள் என்பதல்ல பிரச்சினை. எதற்காகப் போராடினாலும் கூட அவர்கள் எமது நாட்டு மக்கள். அவர்கள் வேறு யாரும் அல்லர்.

உயிரிழந்த உறவுகளை மக்கள் நினைவுகூர்வதற்கு யாரும் தடுக்க முடியாது. எனவே, மக்களின் உரிமையை இந்த அரசு நிலைநிறுத்த வேண்டும் – என்றார்.

# ரிஷாத் கைது: வெட்கக்கேடு!

## அரசைத் தாக்குகின்றார் உலபனே சுமங்கல தேரர்



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளின் ஒருபகுதியாகவே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டுள் ளார். இது வெட்கக்கேடான செயலாகும்.

– இவ்வாறு ஊழல் எதிர்ப்பு முன்னணி அமைப்பின் தலைவர் உலபனே சுமங் கல தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஹரின் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்கான சூழலை அமைப்பதற்காக அரசு இந்த வெட்கக்கேடான செயலைச் செய்துள்ளது.

ரிஷாத் பதியுதீன், பஸில் ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரிஷாத் பதியுதீனை அவருடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு சுதந்திரமாகச் செயற்பட பஸில் ராஜபக்ஷ அனுமதித்திருந்தார்.

ரிஷாத் பதியுதீன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ரவூப் ஹக்கீம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்ததை நாங்கள் மறக்கவில்லை. இதனால் அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 20 ஐ நிறைவேற்றியிருந்தது என்பதையும் நாங்கள் மறக்கவில்லை. – என்றார்.

## கடற்படையினரின் முகாம் முன்பாக

# வட்டுவாகலில் வெடித்தது குண்டு இளைஞர் பலி; ஒருவர் படுகாயம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.25

முல்லைத்தீவு – வட்டுவாகல் பகுதியில் வெடிபொருள் ஒன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தமையோடு மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த சந்திரகுமார் திருசாந்த் என்னும் 19 வயது இளைஞன் உயிரிழந்த அதே நேரம் செல்வகுமார் சாந்தரூபன் என்னும் இளைஞன் படுகாயமடைந் தார்.

இந்தச் சம்பவம் வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் கடற்படையினரின் முகாம் முன்பாக இடம் பெற்றிருக்கின்றது.

நிலத்தில் கிடந்த வெடிபொருள் வெடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. சம்பவத்தில் இரு இளைஞர்களும் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் ஒருவர்உயிரிழந்திருந்தமைஉறுதிசெய்யப்பட்டது.

காயமடைந்தவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு தற்போது மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## 42 பேருக்குக் கொரோனா தொற்று;

# இழுத்து மூடப்பட்டது தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம்

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் அடுத்த மூன்று தினங்களுக்கு மூடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் 42 பேருக்குக்கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் தப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பொருளாதார மத்திய நிலைய வளாகத்தில் 190 பேருக்கு எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 42 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் வர்த்தகர்கள், அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனையாளர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்களும் அடங்குகின்றனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அனைத்து நிகழ்வுகளுக்கும் இரண்டு வாரங்களுக்கு தடை

நாடளாவிய ரீதியில் நடைபெற ஏற்பாடாகியிருந்த அனைத்து நிகழ்வுகளுக்கும் இரண்டு வாரங்களுக்கு தடைவிதிக்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அரச, தனியார் நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள், பொது நிகழ்வுகள்உட்பட அனைத்துநிகழ்வுகளும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்தப்படுகின்றன.

கொரோனா தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் குறித்த அறிவிப்பு வெளியிடப்படுவதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புதியவகை நுளம்பு பொதுமக்களுக்கு எச்சரிக்கை

## இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவி தகவல்




நகர்ப் புறங்களில் மலேரியா நோயை பரப்பும் ஒரு புதிய வகை நுளம்பு வடபகுதியில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

2016 ஆம் ஆண்டில் இலங்கை மலேரியா நோயற்ற நாடாக உலக சுகாதார அமைப்பால் அறி விக்கப்பட்ட போதிலும், இந்த நோய் மீண்டும் நாட்டில் தலையெடுக்கும் சாத்தியம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இதுதொடர்பாக சுகாதார மேம்பாட்டு பணியகத் தில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய, இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவி பேராசிரி யர் அனுலா விஜேசுந்தர இந்த நுளம்பு தொடர்பாகப் பொது மக்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண் டும் என்று தெரிவித்தார்.

இலங்கையின் வெப்பநிலை மற்றும் நீர்வளம் இந்த நுளம்பின் இனப்பெருக்கத்தத்துக்கு ஏற்றதாக அமைந்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட அனோபிலெஸ் டிபென்சி நுளம்பின் புதிய இனங்கள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் கண்டுபிடிக் கப்பட்டன எனப் பேராசிரியர் விஜேசுந்தர தெரிவித் தார்.

இந்தியா மற்றும் சீனாவிலிருந்து வருபவர்கள், குறிப்பாக கட்டுமானத் தொழில் துறையில் ஈடுபடு வோர் மற்றும் யாத்ரீகர்கள், இந்த நோயை இலங் கைக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் அதி கம் இருக்கின்றன எனவும் மருத்துவ சங்கத்தின் தலைவி குறிப்பிட்டார்.

இரத்தினக்கல் வர்த்தக நடவடிக்கைகளுக்காக மொசாம்பிக் மற்றும் மடகஸ்கார் தீவுகளுக்கு செல்லும் வணிகர்கள் தங்கள் பயணத்தின் போது முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பேராசிரியர் அனுலா விஜேசுந்தர கேட்டுக் கொண்டார்.



# கொரியத் தூதருடன் பவித்ரா அவசர பேச்சு

இலங்கையில் கோவிட் வைரஸ் தொற்றைச் சமாளிப் பதில் கொரிய சுகாதாரத்துறையின் ஆதரவு தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி மற்றும் இலங் கைக்கான கொரிய குடியரசின் தூதுவர் வூன்ஜின் ஜியோங் ஆகியோருக்கு இடையே கலந்துரையாடல் இடம்பெற்றுள் ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது –

கோவிட் தொற்று நோயைக் கையாள்வதில் தென் கொரிய அரசு பயன்படுத்திய வழிமுறைகள் மற்றும் இலங்கையிலும் கோவிட் பரவுவதைக் குறைப்பதில் தென்கொரியாவின் அணுகுமுறையை எவ்வாறு கையாளலாம் என்பது தொடர் பாகத் தூதர் சுகாதார அமைச்சருக்கு விளக்கிக் கூறியுள் ளார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு தொடர்பாகக் கொரிய அரசு இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்த அமைச்சர், இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசு சார்பாக நன்றியையும் தூதுவருக்குத் தெரிவித்துள்ளார்.

# கொரோனா ஸ்பூட்னிக் – வி தடுப்பூசிகளின் இறக்குமதி இன்னும் சில நாள்களில்

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஸ்பூட்னிக் - வி கொவிட் - 19 தடுப்பூசிகளின் பங்கு இன்னும் சில நாள்களில் இலங்கைக்கு வரும் என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை இலங்கையில் அவசர பயன்பாட்டுக்காக உபயோகிப்பதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய 70 லட்சம் தடுப்பூசிகளை 69.65 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் முதற்கட்டமாக கொள்வனவு செய் வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை தொடர்பாக அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளதாகவும், நிலைமை யைக் கட்டுப்படுத்த அனைத்து வளங்களும் ஒதுக்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அடிப்படைவாதக் குழுக்களுடன் தொடர்பு அதனால்தான் ரிஷாத் பதியுதீன் கைதாம்!

## மஹிந்தானந்த அளுத்கமகே வியாக்கியானம்

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளு டன் தொடரபைப் பேணிய குற்றச்சாட்டு தொடர்பி லான சாட்சிகள் கிடைத்துள்ளமையின் காரணமா கவே ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டார் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித் துள்ளார்.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணி யும் அடிப்படைவாத அமைப்புகளுடன் இணைக்கப் பாடு ஏற்படுத்திக்கொண்டு செயற்பட்டுள்ள விடயங் கள் தொடர்பாகச் சாட்சிகள் கிடைத்திருக்கின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.



கடந்த சனிக் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பி லேயே அவர் இவ் வாறு கூறியுள்ளார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

ரிஷாத் தொடர் பான அனைத்து சாட்சிகளும் உள் ளன. அதுமாத்திர மன்றி மக்கள் விடு தலை முன்னணி யின் தேசிய பட்டியல் உறுப்பினர் ஒருவரின் மகன்மார் இருவர் தற்கொலைக் குண்டுதாரிகளாக இருந்துள்ள னர்.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணியுடன் அடிப்படைவாத அமைப்புக்கள் சில இணக்கத்துக்கு வந்துள்ளன. இது தொடர்பாக அனைத்து விடயங் களும் நிச்சயம் வெளியில் வரும். அதனால் இது எதிர்கட்சியை அடக்கும் முறை அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். – என்றார்.

# விளையாட்டு மைதானம் வழங்கியமையால் கனகரெத்தினம் ம.வி. தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தி யாலயம், சுகாதார பிரிவினரால் நேற்று (ஞாயிற் றுக்கிழமை) தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலை நிர்வாகம், சுகாதார பிரிவினரின் அனுமதியை பெறாமல் சனசமூக நிலையமொன்றுக்கு, விளையாட்டு நிகழ்வு நடத்துவதற்கு விளையாட்டு மைதானத்தை கடந்த சனிக்கிழமை வழங்கியுள்ளது.

மேலும் இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தமையின் கார ணமாகவே பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை சுகாதாரப் பிரிவினர் தனிமைப் படுத்தியுள்ளனர்.

# மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் உறுதியான தீர்மானம் பிரதமர் மஹிந்தவுடன் பங்காளிகள் பேச்சில் எட்டப்படுமாம்

மாகாண சபைத் தேர்தலைப் பிற் போடும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விற்கும் பங்காளி கட்சித் தலைவர்களுக் கும் இடையில் இடம்பெறவுள்ள தனிப்பட்ட பேச்சின் போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக உறுதியான தீர்மானம் எடுக் கப்படும்.

ஆளும் கட்சிக்கும், பங்காளி கட்சிக ளுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு பேச்சின் ஊடாக மாத்திரம் தீர்வு காண முடியும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலைவரம் தொடர் பாக வினவிய போது அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அரசியல் நோக்கங்களை அடிப்படை யாகக் கொண்டு மே தினக் கூட்டங்கள், பேரணிகள் தடை செய்யப்படவில்லை.

பொது மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத் துக்கு உண்டு. சுகாதார தரப்பினரது தீர் மானங்களுக்கு அமையவே மே தின கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்பதை எதிர் தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

பொது மக்களை ஒன்று கூட்டாத வகையில் தொழிநுட்ப வசதிகள் ஊடாக மே தின நிகழ்வுகளை பொதுஜன பெரமுன கட்சி மட்டத்தில் முன்னெடுக்க பொதுஜன பெரமுனவின் தலைவர்களுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் பங் காளி கட்சிகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தரப்பினரும் கூட்டு பொறுப்பு டன் செயற்பட வேண்டும். கூட்டணியில் கொள்கைக்கு முரணாகப் பங்காளிக் கட்சியின் ஒரு சிலர் கடந்த காலங்களில் செயற்பட்டனர்.

கூட்டணியில் காணப்படும் பிரச்சி னைகளுக்கு தீர்வு காணும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும், பங்காளி கட்சியின் தலைவர்களுக்கும் இடையிலான பேச்சு கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்தப் பேச்சில் கூட்டணியின் 10 பங்காளி கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. பிரதமருடன் தனிப்பட்ட முறையில் பேச்சில் ஈடுபட அனுமதி கோரி யுள்ளார்கள். அனைத்து பிரச்சினைக ளுக்கும் பேச்சு ஊடாக மாத்திரம் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாகாண சபை சபைத் தேர்தலைப் பிற்போடும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பிரதமர் குறிப்பிட்டுள் ளார்.

தேர்தல் தொடர்பில் பல மாறுப்பட்ட யோசனைகள் இதுவரை முன்வைக் கப்பட்டுள்ளன. பங்காளிக் கட்சித் தலை வர்களுக்கும், பிரதமருக்கும் இடையில் இடம்பெறவுள்ள பேச்சின் போது மாகாண சபை தேர்தல் குறித்து உறுதியான தீர்மா னம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவிற்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மற்றும் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களுக்கும் இடையிலான பேச்சு கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது.

கூட்டணியில் எழுந்துள்ள முரண்பாடு கள், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட பலவிடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. கூட்டணியின் ஊடாக ஒன்றிணைந்து செயற்படுகின்றமை தொடர்பிலும் அதற் காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவ டிக்கைகள் தொடர்பிலும் இரு தரப்பு யோச னைகள் கலந்தாலோசிக்கப்பட்டன. – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய நாடுகளை விடவும் இலங்கையில் கொரோனாத் தொற்று வேகமாக பரவுகிறது

## வைத்தியர் சுதத் சமரவீர தெரிவிப்பு



ஐரோப்பிய நாடுகளில் பரவிய கொவிட் வைரஸ் மரபணுவை விடவும் இலங்கையில் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியசாலையின் திறனை மீறி நோயாளிகள் அடையாளம் காணப்பட்டால் பாரிய ஆபத்தான நிலைமை ஏற்படக் கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் பரவல் அதிகரிக்கக் கூடும் பலர் அதில் பாதிக்கப்படுவதைத் தடுத்து காப்பாற்றுவதற்கு மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவிய கொரோனாவை விடவும் வேகமாக இந்த வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளது. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும்.

இந்த நிலைமை தொடர்ந்து நீடித்தால் வைத்தியசாலை கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்படும். அவ்வாறு ஏற்பட்டால் கோவிட் தொற்று சமூகமயமாகுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இதனால் நாட்டில் மிகப்பெரிய அனர்த்தம் ஏற்படும்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் அனைவரும் மீளவும் 14 நாள்கள் தனிமைப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது போக்குவரத்து சேவையை பயன்படுத்துபவர்கள் கடுமையான அவதானம் செலுத்தி பயணிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஹரினை ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபடுத்த அரசு முயற்சியா?

## நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார சந்தேகம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட பிரதான சூத்திரதாரியை இரண்டு வாரங்களில் கைது செய்வதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் ஹரின் பெர்னாண்டோ போன்றவர்கள் இந்த தாக்குதலுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் எனக் காட்ட முயற்சித்து வருகிறதோ என்ற கேள்வி எழுந்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவின் நலன் அறிய கடந்த சனிக்கிழமை சென்ற நாணயக்கார, செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனைக் கூறியுள்ளார்.

குண்டுத் தாக்குதலை நடத்தியது சஹ்ரான்கள் அல்லர். ஹரின் பெர்னாண்டோ போன்றவர்கள் எனக் காண்பிக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறதோ என்ற பலத்த சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஒருதரப்பினரை மகிழ்விக்கவும், அரசாங்கத்தின் தேவைக்கு அமைய அரசாங்கத்துக்கு எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை மழுங்கடிக்கவுமே எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை வேட்டையாட ஆரம்பித்துள்ளனர் எனவும் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

# திருமணத்துக்குத் தாயரான இளம் யுவதி பரிதாபமாக பலி

## ஆபத்தான நிலையில் காதலன்

ஜா - எல வடக்கு குடஹகபொல ரயில் கடவையை கடப்பதற்கு முயன்ற காதல் ஜோடியின் மீது ரயில் மோதியதில் சம்பவ இடத்திலேயே காதலி மரணமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த காதலன், ராகம வைத்தியசாலையின் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள், ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மரணமடைந்த காதலி, தனியார் நிறுவனமொன்றில் காசாளராகக் கடமையாற்றுகின்றார். திருமண வைபவத்துக்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்த போதே, இவ்வாறு விபத்துக்குள் சிக்கியுள்ளனர் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற ரயில் கடவையில், சிவப்பு சமிக்ஞை விளக்கு எரிந்து கொண்டிருந்தது எனும், அந்த ரயில் கடவைக்கு, பாதுகாப்பான படலை இல்லையென பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

# சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பப் படிவம் முல்லையில் தனிச் சிங்களத்தில் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட செயலக வளாகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காகச் சென்ற வேளை தனிச் சிங்களத்தில் விண்ணப்பப் படிவம் வழங்கப்பட்டுள்ளமையால் அதை நிரப்ப முடியாத நிலைக்கு சாரதிகள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை எல்லை கிராமமான துணுக்காயில் இருந்து சுமார் 80 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்குச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காக சென்ற பெண் ஒருவருக்கு தனிச்சிங்களத்தில் விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்ப பெண் சிங்களத்தில் யாரிடம் சென்று நிரப்புவது என்று தெரியாத நிலையில் அருகில் பஸ் தரிப் பிடத்திற்கு சென்றுள்ளார். அங்கு விடுமுறையில் செல்வதற்காக நின்ற இராணுவ வீரர்களிடம் தனக்கு தெரிந்த சைகையில் விவரத்தை கூறியுள்ளார்.

இதனை பார்த்த குறித்த இராணு வீரர் குடும்ப பெண்ணின் அடையாள அட்டையயையும் விவரங்களையும் வாங்கி விண்ணப்பப் படிவத்தை நிரப்பிக் கொடுத்துள்ளார்.

நீண்ட தூரங்களில் இருந்து அரசசேவையைப் பெற்றுக் கொள்வதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு வருகை தரும் மக்கள் மொழி பிரச்சினையினல் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்கள்.

தனி சிங்கள மொழியிலேயே குறித்த விண்ணப்ப படிவம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து அரச சேவையை மக்கள் இலகுவாகப் பெற்றுக் கொடுக்க ஆவண செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org